போன் நெ 13. விலை 2 அணா REGD. NO. 4842

திராவிடநாடு

மலர் 12 | 11—4—54 | இதழ் 41

வருவோர், கடமை

புது அமைச்சர்கள் புறப்படுகின்றனர்—அவர்களேனும் மக்கள் கருத்தை மதித்து நடக்கவேண்டும்; புதுக் கல்வித் திட்டத்தை உடனடியாக 'வாபஸ்' பெறவேண்டும். புது அமைச்சர் வேலையின் புது வேலை அது தான்.

அமைச்சர் குழு மாற்றப்படுவதால் மட்டும் மக்கள் திருப்தியடைய மாட்டார்கள் என்பதை அவர்கள் உணரட்டும்.

ஆச்சாரியார் ஆட்சி, தூத்துக்குடியிலும், டால்மியாபுரத்திலும், பொது மக்களை, சுட்டுப்பொசுக்கியதை நாடறியும்; அத்துடன், கல்வித்திட்டத்தை, எதேச்சாதிகாரத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்த வீரர்கள், இன்றும் வழக்கு மன்றத்திலே நிறுத்தப்பட்டு பழிவாங்கப்படுவதை உலகறியும்—ஏனிந்த பழி வாங்கும் செயல்?

ஆச்சாரியார் ஆட்சிப்போக்கினை காங்கிரஸ்காரரே கண்டித்தபின், அவரது ஆட்சியில் தொடுக்கப்பட்ட வழக்கை, புது மந்திரிசபை ஏன் வாபஸ் பெறக்கூடாது? —நியாயத்தின்பேரால் நீதியின் சார்பில், திராவிட மக்களின் உரிமையின்பேரால் கேட்கிறேன்—வருகின்ற அமைச்சர் குழு, தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை உடனே வாபஸ் வாங்கவேண்டுமென்று! வழக்கை விலக்கி, சிறைப்பட்டுள்ளவர்களையும் விடுதலை செய்து, ஆச்சாரியார் நடத்திய ஆட்சியின் கொடுமையைத் துடைக்க வேண்டுமென விரும்புகிறேன்.

—சி. என். ஏ.

அப்போது, நடந்தது!

தஞ்சையிலே சிவாஜி பரம்பரை! மதுரையிலே நாயக்கர் வமிசம்! ஆற்காட்டிலே, நவாப்! ராமநாதபுரத்திலே, சேதுபதி! திருநெல்வேலிச் சீமையிலே மறவர் ஆட்சி!—குறுநில மன்னர்களும், சிற்றரசுகள் பலவுமாக, நமது தமிழகம் சிதைந்து கிடந்த நேரத்திலே, வெளிநாட்டிலிருந்துவந்தோர் தமது ஆட்சிக்கு அஸ்திவாரம் அமைத்த கதையினை, யாவரும் அறிவர். திருச்சிக் கோட்டையும், தஞ்சை அரண்மனையும் பட்டபாடு! அங்கே ஆண்ட மன்னர்களை ஆட்டிவைத்த ஆரிய குல சிரேஷ்டர்களின் கதைகள்! அவர்களின் தந்திரத்தால் முளைத்த குடுமிபிடிச்சண்டைகள்! அப்போது, நாகையிலே டச்சுக்காரர்கள் — தரங்கையிலே டேனிஷ்காரர்கள்— புதுவையிலே பிரெஞ்சுக்காரர்கள்— சென்னையிலே, இங்கிலீஷ்காரர்கள், ஒருவரை யொருவர் விரட்டும் நோக்கத்தில் விரோதத்தை வளர்த்துக் கொண்டு கிடந்தனர். அவர்களின் பதவிப் பிடிப் போரால், பல அரசகுடும்பங்களிலே, அதிர்ச்சிகள் ஏற்பட்டன. அந்த அதிர்ச்சிக்கு ஆளானவைகளில், குறிப்பிடக்கூடிய பூமி, தஞ்சை.

அங்கே 1758-ம் ஆண்டிலே, ஆண்டவன் பிரதாபசிங், என்பான். மராட்டியச்சிதர், இவன். மங்கிக் கொண்டிருந்த மராட்டியப் புகழின் அந்தி நேரத்திலிருந்த இவன் ஆட்சியின் போதுதான், பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும், தத்தமது செல்வாக்கை நிறுவமுயன்று கொண்டிருந்தனர்.

தஞ்சை ஆட்சிக்குப் போட்டியிட்ட சந்தாசாகிப் என்பான், பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினான். பிரதாப் பக்கம், ஆங்கிலேயர் சேர்ந்தனர்.

இந்தச் சூழ்நிலையில், பிரெஞ்சுப் படைகளுக்குத் தலைவனாக வந்த மர்ந்த லாலி என்பான், ஊர்ஊராக வெற்றி பெற்ற வண்ணம், தஞ்சையை நோக்கிவந்து கொண்டிருந்தான். அதைக் கண்ட பிரதாபன், அந்தணர் ஒருவரை அழைத்து, லாலியிடம் தூது அனுப்பினான்- சமரசத்துக்கு. சென்றவர், வேதியர்! விளைவு, பலனளிக்கவில்லை!! லாலி, புறப்பட்டு வருகிறான், தஞ்சையை நோக்கி.

அப்போது, கீவளூர் எனுமிடத்துக்கு வந்து சேர்ந்தானாம். அங்கேயிருந்த ஆலயங்களைக்கண்ட லாலி, என்னவென்று கேட்க, 'அந்தணர்களின் புகலிடம்' எனக் கூறினாராம் —கூட இருந்தோர்.

அரசியல் தூது வந்து போன வேதியரை நினைத்துப்பார்த்த லாலி, அந்தணர்கள் அரசியல் செல்வாக்குப் பெற்றிருப்பதால், அவர்கள் வசம் நிறையப்பணம்குவிந்திருக்கும் என்று கருதினானாம். இடி!—என்று உத்திரவு கிளம்பிற்று. பார்ப்பனர் இல்லங்கள், தோண்டப்பட்டன, புதையலுக்காக! கோவில்களின் கர்ப்பக் கிரகங்கள், கிணறுகளாக்கப்பட்டன, செல்வத்துக்காக! குளங்களிலேகொட்டினரோ—எனும் ஐயத்தால் நீரெல்லாம் இறைக்கப்பட்டன! இந்த விபரீதங்களைப்பற்றி கேள்வியுற்றான்—பிரதாபன். தூது சென்ற வேதியரை அழைத்துக் கேட்டான். அய்யர், அலறினார்! 'அரசே! இப்போதே, போகிறேன்', என்று புறப்பட்டார், கீவளூருக்கு. படையுடனா, அல்ல! அல்ல!! பிரசாதங்களுடன் — வெகுமதிகளுடன். கண்டான், லாலி! கடுஞ்சினங் கொண்டான்!! விளைவு, மறுநாள் காலையில் பிரெஞ்சுப்படைகள், திருவாரூரில் வந்து நின்றன. அங்கே, நெல் களஞ்சியங்களைக்கண்டனராம்! நீண்டு உயர்ந்த கோபுரத்தைப் பார்த்தனராம்! வியப்புடன் அவர்கள் நுழைந்து பார்த்ததைக் கண்ட விப்பிரர்கள், கோயிலைவிட்டு, ஓட்டம் பிடித்தனராம். ஆனால், அவர்களில் சிலருக்கு, சாதுர்யத்தின் மீதும் சாகசத்திறமையின் மீதும் அபார நம்பிக்கையிருந்ததன் விளைவாக, பிரெஞ்சுக்காரர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று, பாகுமொழிதனை உகுக்க ஆரம்பித்தனராம்! "எங்கள் கடவுளை ஒன்றும் செய்யமாட்டீர்களே!", "கோயில்களை இடித்து விடமாட்டீர்களே!", என்று கொஞ்சவும் கெஞ்சவும் செய்தனராம். இதனைக் கண்ட லாலிக்கு, சந்தேகம் வந்துவிட்டது! தூது வந்த வேதியனை எண்ணிப் பார்த்தான் அவனாலேயே போர் நடைபெறும் நிலை வந்ததாகக் கருதிய அவனுக்கு, கோபம், அதிகமாயிற்று. பாபம்! இந்த ஆரூர் அய்யர்களையும், 'தஞ்சை வேதியர்'கள் என்றெண்ணினான். பிரதாபனின் வேவுக்காரர்கள் என்று கருதி, சீவியெறியச் சொன்னான், தலைகளை! அந்தோ — ஆறு பிராமணர்களின் தலை, வயல்களிலே வைக்கப்பட்டதாம்— எச்சரிக்கையாக! ஒருவனால் 1758 ஜூன் 28-ல் விளைந்த கோரம், இது.

★

பொன்னி

மாற்றார் வியக்கும்படி, பவனி வந்த 'பொன்னி'யை நாடு அறியும். இடையில் வழக்கமாகசமக்கெல்லாம் ஏற்படும் புடலின் காரணமாகஓய்ந்து கிடந்த 'பொன்னி' மீண்டும்உலவத் துவங்கியுள்ளது— தோழர் பெரியண்ணனின் முயற்சியோடு. பொன்னி, புதுமை ஏடாகத்திகழும் வகையில், திராவிடமக்கள் ஆதரவு அளிக்கவேண்டும். பொன்னி வாழ்க!

விலை அணா 4—

பொன்னி லிமிடெட்
111, பவழக்காரத் தெரு,
சென்னை—1.

புதியதோர் விருந்து

தில்லை-வில்லாளன் தரும்

பூமாலை

[திங்கள் வெளியீடு]

ராயல் ⅛ அளவு—பக்கம் 100
விலை 0—8—0

ஆண்டு சந்தா ரூ 6.
அரையாண்டு சந்தா ரூ 3.

ஏஜண்டுகள் தேவை

'பூமாலை' அலுவலகம் சிதம்பரம்

பயன் தராத பாதை

நாடகக் கலைக்கு நல்ல நேரம் காலம் வந்துவிட்டதாம்! சென்னை 'மியூசியம்' தியேட்டரில் சீமான்கள் பலர் கூடிச் செப்பிவிட்டனர்!!

ஏப். 7 ந்தேதி, அங்கே 'தியேட்டர் சென்டர்,' ஆரம்பவிழா நடைபெற்றிருக்கிறது. இந்தச் 'சென்டர்' டில்லிபீடத்தின் ஆதரவோடும் உலக சபையின் உதவியோடும் அரும்புவதாம். அடையாறு அம்மை அருண்டேல் தேவி அறிவித்திருக்கிறார்.

நாடகக் கலைக்கு புத்துயிரூட்டவே, இப்புது முயற்சியாம். டில்லி ஆட்சியின் ஆதரவில் ஆங்காங்கும் அமைக்கப்பட்டிருக்கும் 'தியேட்டர் சென்டர் இயக்கத்து' சென்னை அமைப்புக்கு அருண்டேல் அம்மை தலைவராம்.

கோவை சுப்பிரமணியம் தலைமை வகிக்க, சச்சிவோத்த சர். சி. பி. வாழ்த்துரை வழங்க, விழா நடைபெற்றிருக்கிறது. அருண்டேலுக்கும், சச்சிவோத்தமர்களுக்கும், நாடகக் கலைக்கும் சம்பந்தம் ஏதுவோ? — சந்தேகிக்கலாம், மக்கள்! ஆட்சியினர் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை — அமைத்திருக்கின்றனர், ஓர் இயக்கம்!!

அங்கொங்கெனுதபடி அழைப்பு கிடைக்கும் இடமெல்லாம் தன்னுடைய அருமையான பிரசங்கங்களைச் செய்யத் தவறிடாத, திருவாங்கூர் மாஜி திவான்—இந்நாள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் — சனு தனைச் சங்கு, சச்சிவோத்தமரும், பெரியதோர் பிரசங்கம் நிகழ்த்தியிருக்கிறார்.

சென்னைமா நகரில், சரியான தியேட்டர் இல்லையாம், நாடகம் நடாத்த!—அது, நாடக வளர்ச்சிக்கு, ஊறு செய்கிறதம் உரைத்திருக்கிறார், சச்சிவோத்தமர்! நாடகம்-சிறந்த பிரச்சாரக் கலையாம்!— இதனையும் கண்டு செப்பியிருக்கிறார். கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கஷ்டப்பட்டவண்ணம், கலையால் தமது வாழ்க்கை நிலையை வீழ்த்திக் கொண்டு, நாடகத்துக்கும் அதனரும் வளர்ச்சிக்கும் அரிய தொண்டாற்றிடும் கலைஞர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிலே யாரும் இல்லை, அங்கே! அருண்டேலிருக்கிறார்! ஆச்சாரியார் சீடர் இருக்கிறார்! சச்சிவோத்தமர், வாழ்த்துரை வழங்குகிறார்!!

வாடை வீசாத வசீகர மாளிகைகளிலிருந்தபடி, ஓய்வு நேரத்தை உலகத்தின்மீது செலுத்தி, ஏதோ பேசி, எப்படியோ உலவிவரும் இந்தக் கலா ரசிகர்கள், இயக்க விழா நடத்துகிறார்கள்! இதன் மூலம், நாடகக்கலைக்குப் புத்துயிர் தரப் போகிறார்களாம்! சச்சிவோத்தமர் தரும் முதல் ஆலோசனை — ஒரு தியேட்டர் வேண்டுமென்பது.

தியேட்டரா வேண்டும்? அடையாறும் மைலாப்பூரும் ஆடவும் கூடவும், அழகான மண்டபங்களை விரும்பும். சிந்தாரிப்பேட்டையும் அமிஞ்சிக்கரையும், மண்டபத்திலா, கூடுகிறது! வானமே, மண்டபம் — தரையே, ஸ்டேஜ்! — குரலே, ஒலிபெருக்கி—அவர்கள், நாடகம், நடத்தாமலில்லை! ஆனால், சச்சிவோத்தமருக்கு, தியேட்டர் வேண்டுமாம்! அதனாலேயே கலை பரவுமாம்!!

கலை வாழ்க்கையின் கண்ணாடி என்பர்.

அந்தக் கண்ணாடி இன்று ரசம் குறைந்து, ஒரு பக்கம் மூளியாகி, சிதைந்து கிடக்கிறது. ஒரு காலத்தில் பாராட்டும் பத்திரங்களும் பெற்ற நாடக மணிகள். சோற்றுக்கும் தங்க இடத்திற்கும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ராஜபார்ட்! வந்தாலே வசூல் கொட்டும்!!—ஒரு போது. இப்போது, அவரை எத்தனை நாடகம் ஆடி, முன்னைவிட அதிகமாகக் கத்தினாலும், வசூலில்லை. அவரைப் பாராட்டிய மக்களிருக்கிறார்கள்! ஆனால் அவர்கள் கையில் காசில்லை, காணவும், ரசிக்கவும்! கலை, நசிகிறது—நிலை மோசமாகிறது.

ஆனால், இந்தக் கலா ரசிகர்கள் 'தியேட்டர் சென்டர்' ஆரம்பிக்கிறார்கள்! அதன் மூலம், கலைமணம் கமழப்போவதாகக் கூறுகிறார், அருண்டேல்! புது மண்டபம் வேண்டுமென புகல்கிறார், சச்சிவோத்தமர்!! அவருக்கென்ன? திருவாங்கூர் மாளிகையின் கேளிக்கை மண்டபங்களைக் கண்டு ரசித்தவர்—அமெரிக்கநாட்டு அழகு மேடைகளின் விதமும் வேடிக்கையும் கண்டவர்—பாரீஸ் பாதர் உலவும் பல்வகை தியேட்டர்களையும் பார்த்தவர்—அந்தகைய 'ஆச்சாரபுருடருக்கு' மியூசியம் தியேட்டரிலுள்ள நாற்காலியும், அங்குள்ள வசதிகளும் போதுமா! ஆகவே, கூறுகிறார்—கலையை ரசிக்க, புது மண்டபம் வேண்டுமாம்!!

பங்களா—பணம் — கார் — பட்டாடை—வைரக்குவியல்—போக வாழ்வு ஆகியவைகளில் புரளுவோருக்கு இதுபோது. பொழுது போக மார்க்கம் தேவைப்படுகிறது: கலாரசிகர்களாகிறார்கள்! அந்த ரசனைக்குத் தேவையான அமைப்புகளைத் தேடுகிறார்கள்!!—அந்த வட்டாரத்து அம்மையார், அரசியலாரின் ஆதரவைப் பெறுகிறார்.

9 கோடி!

காஷ்மீரத்துக்கு, நிதி உதவி என்ற பெயரால், டில்லிபீடம் இதுவரை ரூ. 9 கோடி வழங்கியிருக்கிறதாம், 'இந்த உதவியில் ஒரு பைசாகூட இன்னும் திருப்பித் தரப்படவில்லை, எங்களால்' என்று காஷ்மீர் பிரதமர் வெளியிட்டுள்ளார்.

அமைக்கப்படும் இயக்கத்துக்குத் தலைவராகிறார்! பாராளுமன்றத்திலும், பதவி கிடைக்கிறது!! ஆனால், கலையை நம்பியதால், காடுமேடும் சதமென நம்பி, ஓடோடும் கூட்டம், உருத்தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிறது. அவர்களிடம் மறைந்துள்ள கலையைக் காண்போர் இல்லை! ஏனெனில் மக்கள் மன்றம், கலையை ரசிக்கும் நிலையிலில்லை. மக்களின் வாழ்க்கையைச் செப்பனிட வேண்டிய அரசோ — அதைப்பற்றிக் கவலை கொள்வதில்லை. எனினும், 'நாடக சென்டர்' நிறுவப்படுகிறது! உல்லாச பூமியில் உலவும் 'உத்தமர்கள்' அங்கே அமர்ந்து ஆலாபனம் செய்கிறார்கள்!!

கலை, ஓய்ந்த உள்ளத்துக்கு உயிரூட்டி உற்சாகம் தரக்கூடிய வலை. காட்டைத் திருத்துபவனும், ஆலைத் தொழிலாளியும் அயர்ந்தநேரத்தில், உயர்ந்த இன்பத்தை அளிக்கக் கூடிய உற்சாகச் சாதனம். இசை. கானம், கவலைகளைப் போக்கும்! கூத்து, களைப்பை விலக்கும்!! ஆடலும் பாடலும், அனைவருக்கும், தேவை. ஆனால், அதனை அடைய முடியாத நிலையில், நாடிருக்கிறது! வயிற்றுக்கு அல்லாடும் வைத்தியநாதன், கலையை எப்படி ரசிப்பான்? கையில் காசு கிடைத்ததும், குழந்தை குட்டிகள் பட்டினியே, காட்சிதரும், மனதில்——காசு தீர்ந்ததும், பிறகு கவலை! அலைச்சல்! வேலை, வேட்டை!!——எங்ஙனம், கலை வாழும்? இவனை நம்பிக் கிடக்கும் கலைஞர்களின் வாழ்வு எப்படி நகரும்?

மக்களின் வறுமையால், கலைஞர்கள் கஷ்டப்படுகின்றனர்— கலை ஆர்வம், மங்குகிறது! வசூலில்லை. வறுமையும் திண்டாட்டமும் கோலோச்சுகின்றன!!

இந்த வாட்டத்தைப் போக்க வேண்டுமானால், அரசுபீடம், இந்தக் கலைஞர்களுக்கு, நிரந்தர உதவி அளிக்க வேண்டும். கலைபரவ வேண்டும்! இந்தியக்கலை செத்து விடக்கூடாது!!—எனும் உண்மை ஆர்வம் இருந்தால், கலையை வளர்ப்போரின் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவேண்டும். ஆனால், அரசு, அவர்கள் அல்லாடுவதைக்கவனிக்கவில்லை! கலையின் மீதுள்ள ஆசையையும் விடவில்லை— காட்டிக் கொள்ளவேண்டுமே, உலகுக்கு — அதனால், நாடக சென்டர்களை அமைக்கின்றனர்! இலட்சக்கணக்கில் பணம் தருகின்றனர்—அருண்டேல் அம்மை அமர்கிறார்—சுகவாசிகள், கலாரசிகர்களாகிறார்கள்!! இதனால் நாடகக் கலை புத்துயிர் பெற்றுவிடுமாம்! நம்புகிறது, நடாளும் அரசு!!

'தியேட்டர் சென்டர்'-அதற்கு அகில உலகச்சபையின் உதவி— ஆதரிக்க அரசு—தலைமைதாங்க அருண்டேல்—தாளம்தட்ட கலாரசிகர்கள்—இருந்துவிட்டால்போதுமா! கலை செழித்துவிடுமா!! புதியதோர் வர்க்கம், கலைத்துறையிலும்கொட்டமடிக்க மார்க்கம் வகுக்கப்படுமேயன்றிகலையாவளரும்—இல்லை! மக்கள் மன்றத்துக்குத்தான், கலை, வரும !!

நாட்டில் கலை மணங்கமழ வேண்டும், என்றெண்ணுவது, உயர்ந்த குறிக்கோள். கலையும் வாழ்வும், ஒரு நாட்டில் உயர்ந்திருந்தால், அந்நாடு ஏற்றம் பெற்றிருப்பதாக அர்த்தம்! இதனால்தான், பண்டைய அரசர்கள், கலையை வளர்ப்பதில், போட்டியும் ஆர்வமும்கொண்டிருந்தனர்! அந்த ஆர்வம், இன்றைய அரசுக்கும், ஏற்படுவது பாராட்டக்கூடியதுதான். ஆனால், கலையும் வாழ்வும் எப்படி இருக்கிறது! வாழ்வும், உயரவில்லை—கலையும் கரைகிறது. எனினும், 'நாடக சென்டர்' அமைக்கப்படுகிறது.

வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் தூர்க்கப்பட்டு, மனிதர்கள் வாழ்வதற்குப்போராடும் நிலைமாற்றப்பட்டு ஓய்வு மலரவும் உல்லாசம் பெறவுமான வகைகளில் சமூக அமைப்பு மாற்றப்பட்டால், மனிதன் கலையை ரசிக்க முடியும்! நினைப்பும் இருக்கும்—நிறைவேற்றவும் முடியும்.

அப்போதுதான் கலையும் காவியமும் மக்கள் மன்றத்துக்குக் கிடைக்கும்.

மார் ஒடிய வேலை செய்யும் மன்னார்சாமிகள் அதிகம் நிறைந்திருக்கும்போது, கலா ரசனைக்கு மண்டபம் அமைத்தால், சுகவாசிகள் சென்றமர்வரேயன்றி, மன்னார்சாமி எப்படிச் செல்லுவான். கலையை ரசிப்பான். ஏது நேரம்! ஏது, நினைப்பு!!—அவனுக்கு.

இதுபற்றி எண்ணவில்லை, அரசு எனினும், சிலரை அழைத்து, கலை தேவிகளாக்குகிறது.

உணவும் மற்ற தேவைகளும், இன்று எப்படி ஏழைகளுக்கு எட்டமுடியாத உயரத்திலிருக்கிறதோ, அதுபோலவே வாழ்க்கையின் மற்ற ருசிகளும் இருக்கின்றன! லலிதா-பத்மினி டான்ஸ்—ஏழை, 'போஸ்டரை'ப் பார்த்துக்கொண்டு வெளியே நிற்கமுடியுமே ஒழிய, உள்ளே நுழையமுடியாது. டி. கே. எஸ். நாடகம்—பிறர் சொல்லக் கேட்பான் — நேரில் பார்க்கமுடியாது, அவனால். காரணம், வறுமை! இந்தக் கொடுமை ஆட்சிபுரியும் நாட்டிலே. கலை, மக்களின் கண்ணுக்கும் செவிக்கும் எப்படி விருந்தாகமுடியும்.

இந்த அடிப்படையை, அரசினர் அறியாதது மட்டுமல்ல — அகில உலகசபையாம் ஐ. நா.வும் உணரவில்லை. அதனால்தான், 'தியேட்டர் சென்டர்'கள் உருவாகின்றன. அருண்டேல் வரவேற்கிறார்! சச்சிவோத்தமர், தன் சங்கடத்தைத் தெரிவிக்கிறார்!!

கலைமணம் கமழ, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒருசில 'சென்டர்'களை, ஏற்படுத்திவிட்டால், போதாது என்று— கலைஞர்களுக்கு நிரந்தரமான, உதவி அளிக்கப்படவேண்டும். அரசினரே, அவர்களை, ஆதரிக்க வேண்டும் அதைவிட முக்கியமாக, நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தைஉயர்த்தி, 'சுலபமானவேலை—சுகமானவாழ்வு,' கிடைக்கும்படிச் செய்து, கலைஞர்களைமக்கள்அறியவும் மக்களின் மகிழ்ச்சிகளை கலைஞர்கள் வளர்க்கவுமான திட்டங்களைத்தீட்ட வேண்டும்! அதுதான், சமதர்ம திட்டம்!!

அதனை, விரும்பார், காங்கிரசார் அதனாலேயே, இத்தகைய 'புனுகுகளை'ப்பூசுகின்றனர், பயன், தராது, நாட்டுக்கு! பலனும் கிடைக்காது!!

வருந்துகிறோம்

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் நமதியக்கத் தோழர் கோவிந்தன் அவர்களின் அண்ணனார் விநாயகம் 4–4–54ல் இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

ஜாதி மத ஏற்பாடு—பழக்கத்தின் விபரீதம்

"நாம் கெட்டது கெட்டோம்; போனது போகட்டும், இனியாகிலும், இனி வரும் நமது சந்ததியாரைக் காப்பாற்ற முயல்வோமாக" என்னும் பொதுவுடைமையோர் கோரிக்கையை சற்று விசாரித்தறிவோம்.

தற்போது வாழும் ஜனசமூகங்கள், பல தலைமுறையாகத் தொன்று தொட்டு வந்த பழக்க வாசனையால், ஜாதி, மத பொருள் உரிமைகளை விட்டொழிப்பது மிகக்கஷ்டமாகையால், மனிதராசி, எந்த காலத்தில் இந்தவிதமான அநாகரீகங்களிலிருந்து விடுபடும்? என்ற சங்கை பலர் உள்ளத்தில் தோன்றுவதால், மனித குலத்திற்கு விமோசனமுண்டா? என்பதைச் சற்று விசாரித்தறிவோம்.

உலகில் இன்று பல கோடி ஆண் பெண் குழந்தைகள் கூடிய மனிதர் கூட்டம் வாழ்ந்து வருகின்றன. இவர்களில், பெரும்பான்மையோர், தங்கள் முதியோர்கள் வாயலாக வந்த மத பழக்க வழக்கங்களில் கட்டுண்டவர்கள். நமது நாட்டில், இத்துடன் பெரும்பான்மையோரும், ஜாதிக் கட்டுப்பாட்டிலும் பழகிவந்தவர்கள். இந்தப் பழக்கம், முதியோர்களைவிட்டுப் போகுமா? என்பதுதான் சங்கை. இவ்வளவு காலம் இந்திய சமூக வாழ்க்கையில் கலப்புற்றிருந்துவரும் ஜாதி, மதம், நீங்குவதெக்காலம்? தற்கால மனித வகுப்பில் வழங்கும் அபிப்பிராயங்களும், கோட்பாடுகளும், எண்ணங்களும், நடையுடை பாவனைகளும், பழக்கத்தினால் வந்தவை. எதையும் நாம் மண்மேல் பிறக்கும்போது கொண்டுவந்ததில்லை. இறக்கும் போதும் கொண்டுபோவதில்லை. நடுவில் சொல்வதைப்பார்த்தும், கேட்பதைக்கேட்டும், நடப்பதை நடத்தியும் வருகின்றோம். கடவுள், தெய்வம், பேய், பிசாசு, பிராமணன், சூத்திரன், பறையன், பள்ளன் என்றவை சொற்களேயொழிய தனிப்பட்ட பதார்த்தங்களுமல்ல, பொருளுமல்ல. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள் போல் இச்சொற்களை உலகம் சொல்லிக் கொண்டு வந்திருக்கின்றதேயொழிய, மற்றபடி யாரும் பார்க்கக் கூடிய பொருள் அல்ல. இவ்வார்த்தைகளை, மனித குலம் உச்சரிக்காவிடில், கண்களுக்குத் தோன்றப்போவதில்லை. காதுகளுக்குக் கேட்கப்போவதில்லை. மூக்குக்கு வாசனைவுண்டாகப் போவதில்லை. நாவுக்கு, ருசிக்கப்போவதில்லை. உடம்புக்குஸ்பரிசிக்கப்போவதில்லை. இந்த சொற்களை, வாயால் பேசாவிடில், உலகில் வழங்காமலே போய் விடும். சந்ததி மூலமாக எழுதிவைத்துள்ள ஏடுகளாலும், பேசும் வார்த்தைகளாலும், ஜாதி, மதம், கடவுள், தெய்வம் என்ற சொற்கள் உலகில் வழங்கி வருகின்றனவேயொழிய நிலையுள்ள பொருள்களை குறிக்கும் சொற்கள் அல்ல. இவைகள், வெருஞ்சொற்கள். இந்த வெருஞ்சொற்களுக்காகவே கட்டியுள்ள கோயில்களும், தரிக்கும் பூணூல்களுமென அறிக! இந்த வெறும் வார்த்தைகளைக் கேட்டு மயங்கித் தயங்கிநிற்கும் உலகை என்னென்று நினைப்பது?

ஜாதி, மதங்களால் உலகிற்காகிலும், அல்லது இந்தியருக்காகிலும், எந்தவித நன்மையும் விளைந்ததாக எண்ண இடமில்லை. இவ்விரண்டு நம்பிக்கைகளால் உணவுப் பொருள் விளைவுற்றனவா? உடை பொருள் அதிகரித்தனவா? எந்தவித செல்வமாகிலும், நாட்டில் பெருகிற்று? அல்லது அறிவாகிலும் விருத்தி அடைந்ததா? பாமர மக்களுக்காகிலும் அல்லது கற்றவர்களுக்காகிலும், தெளிவும், ஞானமும் பெருக்க வைத்தனவா? உலகிற்கு உபயோகமாகும்படியான, எந்தப் பொருளையாகிலும், அல்லது பகுத்தறிவையாகிலும் உண்டாக்கினவா? ஜாதி மதங்கள் மனித குலத்தில் தோன்றியமுதல் சண்டையும் போரும், கலகமும் வைராக்கியமும், சமூக வித்தியாசங்களும், வேற்றுமையும், வீண் செலவும், வீண் பிரயாசையும், பொய் நம்பிக்கைகளும், பித்தும், அகந்தையும், அழிவும், நாசமும் உலகில் விளைவதற்கு அஸ்திவாரங்களாக இக்கொடூர கற்பனைகள் இருந்து வந்தனவேயொழிய மனித வாழ்வுக்கு எந்த உபயோகத்தையும் தர சக்தியற்றவைகளாகவே இருந்து வருகின்றன. ஆனால் இவ்வளவு கொடிய கற்பனைகள், இவ்வளவு காலம் சமூகவாழ்வில் தங்கி இருக்கின்றதே என்று கேட்கலாம்? கெடுதியை விளைவிக்கும் இந்த எண்ணங்கள் என் இதுகாறும் அழிவின்றி நிலைத்துவருகின்றதென்றும் கேட்கலாம்?

மதங்கள் உண்டான பிறகு, அவைகளுடன் நீதியும், நெறிமுறைகளும், மதங்களோடு, மதக் குருக்களால் தந்திரமாக சேர்க்கப்பட்டன. புராதன சமூக ஒழுங்குகளாகிய ஈகை, தயை, அன்பு, ஒற்றுமை இவைபோன்ற நற்குணங்களை, ஒரு பக்கத்தில் மதங்கள் தழுவிக் கொண்டு, மதக்கோட்பாடுகளுடன், சமூக வாழ்வுக்கு இன்றியமையாதனவாகிய நற்குணங்களையும், நற்செய்கைகளையும் வற்புறுத்தத் தலைப்பட்டன. "உன் தெய்வம் பெரிது, என் தெய்வம் பெரிது" என்று சண்டையிட்டுக்கொண்டு வருவதோடு, நீதி நெறியுடனும் நடக்கவேண்டுமென்றும் மதங்கள் சொல்லிக்கொண்டு வந்தன. இந்த வேஷத்தால், மதங்களுக்கு ஆயுள் நீண்டு வந்தது. இரண்டாவது ஆதிகாலத்தில், மதங்கள் கொடூர கோட்பாடுகளை தணித்துக்கொள்ள நேரிட்டது. மனிதர், மெய்ஞ்ஞானத்தால் பகுத்தறிவை அதிகரித்துக் கொள்ள சந்தர்ப்பம் நேர்ந்ததும், மதக்கோட்பாடுகளை கண்டிக்கத் தலைப்பட்டனர். இதனால், மதங்கள் முன்னிருந்த பிடிவாதங்களையும், முரட்டுத்தனங்களையும் மிருகத் தன்மை குறைத்து மானுஷீகத் தன்மையை அடையலாயின. மதங்கள், இந்த மாறுதலை அடையாதிருக்கும் பட்சத்தில், மனிதப் பூண்டு அழிவுற்றிருக்கக்கூடும். ஏன்

இந்தக் கொடூர ஸ்தாபனம், மனித சமூகத்தில் முளைத்தது என்றும் கேட்கலாம். மனித சமூக வாழ்க்கையில், நல்லதும் கெட்டதும் இயற்கையாகவே தோன்றுகின்றன. சில சீவன்களுக்கு நல்ல உறுப்புகளும் தோன்றுகின்றன; கெட்ட உறுப்புகளும் தோன்றுகின்றன. ஆனால், கெடுதியை விளைவிக்கும் உறுப்புகள் வலிவு பெறுமாயின் அந்தச் சீவன்கள் நாசமுறுகின்றன. சிவதேரியம், விஷ்ணுதேரியம், பிரமதேரியம் என்ற பண்டைக்கால நாற்கால் மிருகங்கள், கெடுதியை விளைவிக்கும் சில அவயவங்களைப் பெற்றதனால், அம்மிருகங்களே க்ஷீணித்துப் போயின. அதுபோலவே ஜாதிமத ஸ்தாபனங்கள் சிற்சில மாறுதலை அடையாவிடின், மனிதப் பூண்டையே அழித்துவிட்டிருக்கும். இத்தகைய காரணங்களால் ஜாதிமதங்கள் தற்காலம் நிலைத்து வருகின்றன.

மூன்றாவது காரணமும் கவனிக்கத்தக்கது. முன்போல் அரசுகள் மதங்களையும், ஜாதியையும் வைராக்கியத்துடன் ஆதரிப்பதில்லை. அனேக அரசுகள் மதஜாதி விஷயங்களில் நேராகத் தலையிட்டுக்கொள்ளாமல், பாராமுகமாக இருந்துவருகின்றன. இதனால், அரசுகளுடைய உதவியை இழந்த மதங்கள், தங்கள் ஆக்கிரம குணங்களை, சற்று சாந்தப்படுத்திக்கொள்ளவும் நேரிட்டது.

ஜாதியும் இவ்வாறே தணிவுற்று வருகிறது ஜாதியின் அட்டகாசத்தையொழிக்க பல காரணத்துவம் உண்டாய் வருகின்றன. முக்கியமாகத் தாழ்ந்த ஜாதியாரின் மனவெழுச்சி, ஜாதியின் கடூரத்தைத் தணிவுறச் செய்துவருகின்றது. ரயில், கப்பல் முதலிய போக்குவரத்துக்கு வேண்டிய ஸ்தாபனங்களால், உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் கலந்து யாத்திரை செய்ய நேரிடுவதால், ஜாதி மமதை தணிவுறுகிறது. அறிவும், தெளிவும், கல்வியும், நாகரீகமும் பரவி வருதலாலும், ஜாதி வேற்றுமை வெளியில் காட்ட சற்று பயப்படுகின்றது. ஆனால், அதனை முற்றிலும் வேர்களைந்தெடுத்து விடாவிட்டால் திரும்பவும் இந்தியகுலத்தை நாசமாக்க சந்தர்ப்பம் நேரிடும். அதற்குச் சந்தேகமில்லை. மதமும் ஜாதியும் பற்பல நாகரீகங்களை அழித்துவிட்டிருக்கின்றன புத்த தருமத்தையும், அதன் நாகரீகத்தையும் இந்தியாவில் அழித்தவை, இந்து மதமும், இந்து ஜாதியுமாகும். இவை இரண்டுமே, தற்கால மேல்நாட்டு நாகரீகத்தை நமது நாட்டில் பரவாமல் அழிக்க முயல்கின்றதை கவனிக்கவேண்டும்.

ஆதலின் ஜாதி மதங்கள், பண்டைக்காலந் தொடங்கி, பல உருவங்களைக்கொண்டு, ஒரு தலைபோனாலும், மற்றோர் தலையைக்கொண்டு முளைத்து முளைத்து வருவதால் எப்படி அவை வேர் அறச் செய்ய முடியும்? இந்த சங்கைக்கு மெய்ஞ்ஞானம் ஏதாகிலும் வழி காட்டுகின்றதாவெனப் பார்ப்போம். மண்மேல் பிறக்கும்போது யாதும் கொண்டு வந்ததில்லை என்றார், ஓர் நமது பெரியோர். இதனையே விஞ்ஞான அனுபவ, அனுமான சாட்சியங்களைக்கொண்டு, ஸ்தாபிக்கின்றது. தேக உறுப்புகளைத்தான், நாம் கொண்டு வருகின்றோம். நடக்கக் காலும், செய்ய கையும், பேச வாயும், மற்ற நடத்தைகளுக்கு வேண்டிய அவயவங்களுமே நாம் பிறப்போடு கொண்டு வருகின்றோம். மனமென்பதும் விஞ்ஞானமென்பதும் அறிவு என்பதும், சுய அறிவு என்பதும், மனோ விகாரமென்பதும், இவை யெதையும் நாம் கொண்டு வருவதில்லை. நாம் பிறக்கும்போது சிற்சில நடத்தையைத்தான் காட்டுகின்றோம். அவைகளாவன, அழுதல், அசைதல், மூச்சுவிடுதல், மலஜலம் தள்ளுதல், உண்ணுதல், பார்த்தல், கேட்டல், ஸ்பரிசித்தல் முதலிய சொற்ப நடத்தைகளைத்தான், பிறப்போடு கொண்டு வருகின்றோம். இந்த சொற்ப நடத்தைகளை விருத்தி செய்துகொண்டு வயது வந்தவன் பலகோடி நடத்தைகளை செய்து வருகின்றான். ஆதலால் மனிதன் காட்டும் நடவடிக்கைகள் யாவும் பிறந்த பிறகு குழந்தை பருவ முதல் கற்றுக்கொண்ட நடத்தைகளேயாகும். பேசுவதற்கு நமக்கும், வாலில்லாக் குரங்குகளுக்கும் பச்சைக்கிளிக்கும், மைனாப் பட்சிக்கும் சில அவையவங்கள் தொண்டையில் இருக்கின்றன. இவை கண்ட காட்சி. இந்த அவயவங்களால், மனிதனும், மைனாவும் பேச சக்தி பெற்றுள்ளன. நாம் பேசும் சொற்கள் யாவும் சொல்லிக்கொடுத்த பேச்செனவறிக. மனிதனுக்காகிலும், அல்லது மைனாவுக்காகிலும், இளமையில் பேசக் கற்றுக்கொடாவிட்டால், இரண்டு பிராணிகளும், ஊமையாகவே இருக்கும். இரண்டொரு கூச்சல் செய்வதைவிட, வேறு எந்தப் பேச்சும் பேசுவதற்கு இல்லாமையாகும். ஆதலின், நாம் பேசும் வார்த்தைகள் யாவும், குடும்ப வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் (கலாசாலைகள் பள்ளிக்கூடங்கள், புஸ்தகசாலைகள்) கற்றுக்கொடுக்கப்பட்டனவும், கற்றுக் கொண்டனவுமான சொற்கள். இந்தச் சொற்கள் இரண்டு வகைத்து. உலகப்பொருளைக் குறிக்கும் சொற்கள் ஒருவகை. எந்தப் பொருளையும் குறிக்காத வெறுஞ் சொற்கள் இரண்டாவது வகை. இந்த இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவைகளான சொற்களில்: கடவுள், தெய்வம், நரகம், மோட்சம், ஜாதி சமயம், நல்லநாள், தீயநாள், பாப்பான், பறையன், வள்ளுவன், வேளாளன், நாயுடு, முதலி, ஐயர், ஐயங்கார் முதலிய சொற்கள் யாதொரு பொருளையும் குறிக்காத கற்பனா சொற்களாகும் இந்தக் கற்பனைச் சொற்களின் ஆதி ஆதாரத்தை விளக்கிக் காட்ட இது வல்ல இடமென்றே தெரிவித்துக்

சூலூர் வள்ளுவர் படிப்பக
உதவி நாடகம்

18—4—54 ஞாயிறு
இரவு 9-30 மணிக்கு
சூலூர் சுந்தரனார் பந்தலில்
கலைஞர் கருணாநிதி தலைமையில்
கலைவாணர்
என் எஸ். கிருஷ்ணன்,
டி. ஏ. மதுரம்
மற்றும் அவர்தம் குழுவினர்
நடிக்கும்
பணம்
நாடகம் நடைபெறும்.

கொள்ளுகிறோம். இந்தச் சொற்களால்தான், உலகிற்கும், முக்கியமாக நமது தேசத்திற்கும் விளையும் கேடுகளெல்லாமென அறியலாம்.

இந்த சொற்கள் சிறுவயதிலிருந்தே வழங்காவிடில் அதாவது சிறுவர் காதில் விழாதபடி தடுக்கப்படுமாயின் அத்தகைய சிறுவர்களைக் கொண்ட சந்ததியார், கடவுள், தெய்வம், ஜாதி சமயம் முதலிய சொற்கள் இல்லாமலே வளருமன்றோ? அச்சொற்கள் யாரும் கேளாமற்போமாயின் அவைகளின் மூலமாக எழும் பொய் நம்பிக்கைகளும் சித்தாந்தங்களும் மூடநடையுடை பாவனைகளும் இல்லாமற் போமன்றோ? ஒரு சிறு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். தெருவில் போகும் ஒருவன் கோவில் கோபுரத்தை பார்த்தவுடன் அதில் உள்ள கற்சிலையை கைகூப்பி வணங்குகின்றான். இது சிறுவயது முதல் கண்ட, கேட்ட பழக்கத்தால் செய்யும் செய்கை. இவன் குழந்தை பருவ முதல் கடவுள் என்ற வார்த்தையை கேட்டறியாதவனாய் இருப்பானாயின் இத்தகைய மூடச்செய்கை அவன் செய்ய மாட்டான். அல்லது அவனுக்கு சிறுவயது முதல் கோயில்களில் உள்ளது பொம்மைகளே அல்லாது தெய்வங்களாகாவென கற்பித்து கொடுத்திருப்பானேயாகில் அவன் கண்ட கோபுரங்களை நோக்கி கைகூப்பமாட்டானன்றோ? அல்லது உற்சவங்களில் விக்கிரகங்களை தூக்கி வரும் காலை, இவைகள் பொம்மைகளே ஒழிய வேறொன்றில்லை எனக் கற்று இருப்பானேயாகில், கண்ட சிலைகளுக்கும், கண்ட விக்கிரகங்களுக்கும் கை தூக்கமாட்டானன்றோ? இவ்விதமாக வளரும் நமது சந்ததியார், மதப்பற்றின்றி வாழ என்ன தடை? ஜாதியும் அவ்வாறே தீண்டாமை யொழிக வென்று நயக்து புத்தர் கால முதல் சிலர் சொல்லி வந்தும். அதுஒழிந்தபாடில்லை. பணக்காரனுக்கு ஏழைகளை மனிதர்களென பாவிக்கச் சொல்லியும், அவ்விதம் பாவிப்பாரில்லை. ஏன்? நமது சிறுவர்கள் இந்த வித்தியாசங்களைப் பாராட்டுகின்றபடியால் எனவறிக. அப்படி பாராட்டவொட்டாமல், சிறு குழந்தை முதல் ஏழைப் பிள்ளைகளுடன், பணக்காரப் பிள்ளைகள் கலந்து வாழும் பட்சத்தில், வயது வந்தபோதும் இரண்டும் வித்தியாசமற வாழுமன்றோ? அந்த விதமாகவே, பறையர், பள்ளர், முதலிய தாழ்த்தப்பட்டவர்களின் குழந்தைகளும் உயர் குலத்தோர் பிள்ளைகளும் கலந்து வாழும் பட்சத்தில் தீண்டாமை அந்த சந்ததியாருக்கு இல்லாமற்போமன்றோ?

ஆதலின், நமது சமூகம், ஜாதி மத தீமைகளினின்று விலகவேண்டுமானல், நமது சிறுவரையும், சிறுமியரையும் அத்தீமைகளில் பழக்காமல், அச்சொற்கள் அவர்காதில் விழாமல்வளர்ப்பதேமெய்ஞ்ஞானத்தின் திடமான பாடமாகும். இவ்வித நடைத்தையோடு பழகும் குடும்பங்களும், அவர்கள் சந்ததியாரும் பல்லாண்டு பல்லாண்டுகளாக, மத கற்பனை, ஜாதி வேற்றுமை இன்றி வளர்ந்து இனிவரும் உலகை சுகப்படுத்துமாறு. நமது கடமையைச் செய்து வருவோமாக!

*

மகத்தான சாதனை

அண்மையில் வியக்கக்கூடிய முயற்சியொன்றில் வெற்றி பெற்றிருக்கிறார், இலங்கைத்தமிழர் முருகப்பிள்ளை நவரத்தினசாமி. இலங்கைத் தீவிலிருந்து கோடிக்கரைக்கு கடலில் நீந்தி, வெற்றிபெற்றிருக்கிறார். 32 மைல், நீர்! அதுவும் உப்பு நீர்—அலையும் சுறாவும் உலவக்கூடிய கடல் நீர்! அதனை நீந்திவந்திருக்கிறார், தோழர். இவ்வளவுதூரத்தை நீந்தி வெற்றிபெற்றிருப்பவர், உலகத்திலேயே, நவரத்னசாமிதான்!

இவர்பற்றி 'சுதந்திரன்' ஏட்டில் வந்துள்ள, பேட்டி இது:-

நீச்சலில் எனக்கு சிறுவயது முதற்கொண்டு அதாவது அறிவு தெரிந்த காலத்திலிருந்து அனுபவமுண்டு. நான் சிறுவயதில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஆங்கிலக் கால்வாய் கடக்கப்பட்டதாக கேள்விபட்டேன். ஏன்நானும் இதுபோன்ற ஓர் முயற்சியைச் செய்யக் கூடாது என்று எழுந்த கேள்வியே இந்த எண்ணத்தை வலுவடையச் செய்தது. நாம் குறுக்கே ஊடறுத்துச் செல்லக் கூடியதான கடல் பாக்கு நீரிணையைத்தவிர வேறெதுவுமில்லையாகையால் அதனை என்றாவதோர் நாள் கடந்தே தீரவேண்டுமென்று முடிவு செய்தேன்.

முதலாவது தடவை நீந்தி இடையில் திரும்பியது சம்பந்தமாய் முரண்பாடான தகவல்கள் வெளியாயின என்பது உண்மைதான். நான் படகில் தூக்கி ஏற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டது தவறு.

கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. நான் அங்குமிங்கும் அலைத்துச் செல்லப்பட்டேன். புயலும் மழையும் ஒரு பக்கம் தாக்க ஆரம்பித்தன. இந்தக் கொந்தளிப்பால் சுமார் ஒன்றரை மணி நேரம் எனக்கும் என்னுடன் படகுகளில் வந்த கோஷ்டியினருக்குமிடையில் தொடர்பற்றிருந்தது. இயந்திரப் படகுகளால் கூடச் சமாளித்து முன்னேறிச் செல்லமுடியாமற் போய்விட்டது. இயற்கையின் கொந்தளிப்புக் காரணமாய் நிலைமை சமாளிக்க முடியாமற் போனதால் முயற்சியைக் கைவிட்டு நானாகவே படகில் வந்தேறிக்கொண்டேன். என்னை ஆட்கள் தூக்கியேற்றியதாகச் சொல்லப்பட்டது தவறு. நான் அத்தடவை பல சமயங்களில் பல மைல்தூரம் பின்னுக்கும் இழுத்துவரப்பட்டேன். இதனால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விமானங்களில் வந்து பார்த்தவர்கள் வித்தியாசம் வித்தியாசமான தூரத்தைச் சொன்னார்கள். எவ்வளவு தூரம் நீந்திச் சென்றேனென்பதை படகுகளில் மீற்றர் இல்லாத காரணத்தால் சரியாகச் சொல்லமுடியாமற் போய்விட்டது.

கேள்வி: கோடிக்கரையை வெற்றி வீரனாக அடைந்த உங்களுக்குத் தாய்நாட்டுச் சோதரருக்கு முதலில் என்ன சொல்லத் தோன்றியது?

பதில்: விடாமுயற்சியினாலும் பிடிவாதத்தினாலும் முன்னேறினேனென்று சொல்லத் தோன்றியது.

கேள்வி: தங்களுக்குக் கடவுள் பக்தி அதிகமுண்டல்லவா?

பதில்: கிடையாது. நான் மனச்சாட்சியை மட்டும் மதிப்பவன். மனச்சாட்சிக்குச் சரியெனப்பட்டதை நிறைவேற்றியே தீருவேன். சரியற்றதைச் செய்யமாட்டேன். ××

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக, அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 11—4—54 [ஞாயிறு

தொடர் கதை

★

மாலை சூட்டினராம்! வாழ்த்திதழ் அளித்தனராம், காமராஜருக்கு!!

இனி, அவருக்கு இதுபோல நிறையக் கிடைக்கக்கூடும்

நாம் கூறுவது, இப்போது நடந்ததல்ல! சுமார் ஒரு திங்களுக்குமுன் நிகழ்ந்தது!!

அப்போது நடைபெற்றதிலும் என்ன ஆச்சரியம்' ஒரு காங்கிரஸ் தலைவருக்கு, மாலையும் வரவேற்புமா பஞ்சம்!—எனக் கேட்கக்கூடும்

நினைத்தால், நிறையப் பெறலாம் ஆனால், நாம் குறிப்பிடுவதுபோன்ற வரவேற்பும் பூமாலையும், அவருக்கு வழக்கமாகக் கிடைப்பவை அல்ல!

ஏனெனில், அவைகளை வழங்கியவர்—காங்கிரஸ்காரர்களல்ல; – திராவிட இயக்கத்தார்.

சம்பவம், மலேயாவில் நடைபெற்றது!

தாயகத்திலிருந்து வந்தவருக்கு, தமது கண்ணியத்தையும், அதே வேளையில், கடமையையும் காட்டிக் கொண்டிருக்கின்றனர் கடல்கடந்து வாழும் கழகத் தோழர்கள்!

கண்ணியத்துக்கு அடையாளம், பூமாலை—புகழ் மாலை.

கடமைக்கு அடையாளம், இரண்டு கருப்புக் கொடிகள்!

காமராஜருக்கல்ல — ஒன்று ஆச்சாரியாருக்கு! மற்றொன்று, நேரு பண்டிதருக்கு!!

"இருவர் கையிலும் சிக்கி, எமது தாயகம், தாங்கொணாச் சங்கடம் அடைகிறது. அதன் விளைவுகளை, இங்குள்ள திராவிட மக்களாகிய நாங்கள் அறிகிறோம் இதனை ஒழிக்க, காமராஜரே!—நீங்கள் பணிபுரியவேண்டும்" என்றும் தெரிவித்துக்கொண்டனராம்.

கருப்புக்கொடிகளுக்குப் பஞ்சமில்லை—இரண்டினைக் கொடுத்தவர்கள், இன்னொன்றினையும் அளித்திருக்கலாம் செய்யவில்லை!

காரணம்?—அங்குதானிருக்கிறது, தென்னாட்டு அரசியலில் நாம் காட்டிவரும் நல்லெண்ணம்.

*

கண்ணீர் சிந்திய காமராஜரைக் கண்டிருக்கிறோம், முன்பு! திருச்செங்கோட்டாரின் செல்வாக்குக்கு முன்பு, சிதைந்த சித்திரமாக உலவிய 'திருப்பரங்குன்றத்து' வீரருக்காக சிந்தை நொந்திருக்கிறோம்!

தென்னாட்டு அரசியலில், காமராஜர் காங்கிரஸ் கட்சியிலிருந்தாலும், நாம் மாற்றுக்கட்சியிலிருந்தாலும், அவருக்காக நாம் பரிதாபப்பட்ட சம்பவங்கள் ஏராளம். ஏனெனில், முடியாத தொடர்கதையின் ஒரு பக்கத்தை நாம் படித்துக் கொண்டிருக்கிறோம்! அதே புத்தகத்தின் மற்றோர் பக்கத்தை அவர் படித்துக்கொண்டிருக்கிறார்!!

அன்றைநாள் தொட்டு இன்றுவரை, நம்மை ஆட்டிப் படைக்கும் அஸ்திரங்கள், எங்கேயிருந்து புறப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். அந்த 'அம்புறாத்தூணி'யை உடைக்க நாம் போராடி வருகிறோம். ஆனால், அன்பர் காமராஜரும் அவர்தம் தோழரும், நாம் சுட்டிக் காட்டும் 'அம்புறாத்தூணி'யை தேன் வழியும் கூடென நம்பி, அருகில் செல்வதும், அடிபடுவதுமாக இருந்துகொண்டிருக்கின்றனர்! அடிபடும்போது அலறுவர்—'அது வேண்டாம்!' எனச் சொன்னால் சீறுவர், நம்மீது. இந்த விசித்திரத்தை வளர்த்து வந்த திரை, ஆச்சாரியார் ஆட்சியில் கிழிந்திருக்கிறது—அடிபட்ட காமராஜர் விழித்துக்கொண்டிருக்கிறார். அவ்விழிப்பு ஏற்பட வேண்டுமென்பதற்காகத் தான், கருப்புக்கொடி தந்து, கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்லினர்—மலேயா கழகத்தார்! திரும்பிய நண்பர், ஆச்சாரியாரிடம் கருப்புத்தூணியைக் கொடுக்கவில்லை—ஆனால், பதவியிலிருந்து போகச் செய்திருக்கிறார்!

*

திருச்செங்கோடு தோற்றிருக்கிறது! திருப்பரங்குன்றம் வெற்றி பெற்றுவிட்டது!

பூரிப்புடன் உலவுகின்றனர் — காங்கிரஸ் நண்பர்கள். பொறுப் பேற்றுக்கொண்டார்—என்று ஆனந்தத்தோடு கூறுகின்றனர், காங்கிரஸ் நண்பர்கள்.

அதே நேரத்தில், விஷயத்தைப் பூசி மெழுகும் வேலையிலும், சில 'புனிதர்கள்' ஈடுபடுகின்றனர்—ஆச்சாரியாருக்கும் காமராஜருக்கும், வேற்றுமையில்லை; அகமும் முகமும் நோணதபடி நடந்துகொள்ளுகின்றனர், என்பதாக. அதற்காக அவர்கள், ஜேஹிந்த்! வந்தேமாதரம்! கூச்சலை, வானளாவ எழுப்பினாலும் விஷயத்தை எல்லோரும் அறிவர்.

மறைந்திருந்து தாக்கிய ராமனின் அம்புக்கு வாலி செத்தான், ராமாயணத்தில்! அரசியலில், ராசகோபாலரின் அம்புகளுக்கு ஆளப்பட்ட காமராஜர், சாகவில்லை—புது உருப்பெற்றிருக்கிறார்!

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின், உயரமான இடத்தில் வீற்றிருந்த ஆச்சாரியார், அழைத்து வரப்பட்டார்—சிலரால். திருப்பரங்குன்றத்துப் படை கலங்கிற்று! திருச்செங்கோட்டார் 'பூபாளம்' பாடினார்!!

இரண்டு படைகளும், காங்கிரஸ் கூடாரத்துக்குள் இருப்பவைதான். எனினும், இரண்டும் மோதுவது எல்லோருக்கும் தெரிந்தது. ஒரு போது தங்களால் விரட்டியோட்டப்பட்டவர், சென்னைக் கோட்டையில் அமர்ந்து, சிங்கார வாழ்வைப் பருகினார்! வாய்த்த சமயத்தில் 'வாலிகளை ஒழிப்பேன்' எனச் சூளெடுத்துக்கொண்டவர் போல, வாயாஸ்திரம், செபலாஸ்திரங்களைச் சொரிந்தார். காட்டிலும் மேட்டிலும் கர்ஜனை கேட்டது, காமராஜரால் காங்கிரஸ் கரைந்துவிட்டதாகவும்—தான் அதனைக் காப்பாற்றுவதற்காகவே, தள்ளாத வயதிலும் சங்கடங்களைத் தாங்குவதாகவும்! சாக்கடை என ஏசினார்! துடைப்பக்கட்டை எனச் சொன்னார்! தாங்கிக்கொண்டது, காமராஜ் படை—கண்ணீராலும் செந்நீராலும் கட்சியைக் காப்பாற்றிய படை. அது இன்று வென்றுவிட்டது—வெற்றிக் களிப்பில் மகிழ்கிறது.

*

நண்பர் காமராஜருக்கு, இந்த வெற்றி, சொந்த வெற்றியாகும்—அவரது குழாத்திற்கு, குதூகலமான செய்தியாகும்.

நாட்டுக்கு!—அதனையே நாம் எண்ணவேண்டியவர்களாகிறோம்.

ஆச்சாரியார் போனதால், இருள் விலகிற்று! கதிரோன் மலர்ந்தான்!—என்று கூறமுடியாது. ஆனால், இருளோடுகூட புயலும் மழையும் தாக்கிற்று, முன்பு—இப்போது, அப்புயலும் மழையும் போய்விட்டதென்று கருதலாம்.

கட்சிக்காரர்களை காலில் போட்டு மிதிக்கவேண்டுமெனும் ஆசையில், ஆச்சாரியார் செய்த அக்கிரமங்கள், அநேகம்! கொல்லைப்புற வழியைத்தேடினார்—கொலுவீற்றார்—கொட்டினார்—வரிகள் போட்டார்—எல்லாவற்றிற்கும் மேலாக, புதுக் கல்வித்திட்டம் ஒன்றை கொண்டு வந்தார்.

வர்ணாசிரமம், வாழ்க!—என்றார். அப்பன் தொழிலையே மகன் செய்ய வேண்டுமென்றார். அவருக்கு நாட்டின்மீது கவனமிருந்தால் இத்திட்டம் வந்திருக்காது. நாட்டைவிட, பழிவாங்குவதையே தன்நோக்கெனக் கொண்டார். அதனால், சர்வாதிகாரம் ஏந்தினார். 'விருதுநகராரே! பார்—நீ, என்னை விரட்டினாய். தாளடி பணிகிறது, நாடு' என்பதைக் காட்டிக்கொள்ளும் ஆசையில், 'எல்லாம்வல்லவர்' ஆனார். விளைவு, அவர்கள் கூடாரத்தைமட்டுமல்ல, நாட்டையே தாக்கிற்று! காமராஜ் படையைப் பழிவாங்க நினைத்தார் — நாட்டில் காமராஜ் இனம்தானே அதிகம் என்பதை மறந்தார்—அவர் நினைப்பு காமராஜ் கூட்டத்தைவிட, காமராஜ் பிறந்த திராவிடசமுதாயத்தை கொட்டிற்று—துடிக்கச் செய்தது.

நாட்டில், புது 'ஹிட்லரை'க் கண்டோம் — ஜனநாயகத்தைக் காலில் போட்டு மிதிப்பவரைக் கண்டோம்—நாமெல்லாம் சித்ரவதை செய்யப்பட்டோம்—ஆறு பிணங்கள், வீழ்ந்தன—காங்கிரஸ் ஆட்சியெனும் இருளில் ஆறு ஆண்டுகாலமாகக் கிடந்த நம்மை, இடியும் புயலும், இந்த இரண்டாண்டில் மிகமிகத் தாக்கிற்று.

இப்போது ஆச்சாரியார், போகிறார்! இடியும் புயலும் போகிறதென, பெருமூச்சுவிடுகிறது, நாடு!!—இந்த முடிவைக் காணத்தான், ஒரு கருப்புக் கொடியைக் கொடுத்தனர், மலேயா கழகத்தார்.

*

பொறுப்பேற்கின்றார், காமராஜர்! பூரிக்கின்றனர், தோழர்கள்!!

சர்வாதிகாரியின் கையிலிருந்து நாடு விடுபடுகிறதென்னும் மகிழ்ச்சி மலர்கிறதெனினும், மறு நிமிடமே வேதனையும் விம்முதலும் நமது கண்களில்படாமலில்லை.

காமராஜர், தொண்டர்களின் தோழர் — மறுக்கவில்லை; ஏழைக் குடியிலிருந்துவந்தவர் — தெரியும், மக்களுக்குப் பணியாற்றும் ஆவல் கொண்டவர்—கூறுவார்கள். ஆனால் அவரால், என்ன செய்யமுடியும், இந்த நாட்டுக்கு? இதுவே, சிந்தனைக்குரிய கேள்வி.

ஏழையின் குமுறலையும், இல்லாதவன் அலறலையும் காமராஜர் காணலாம். காணக்கூடிய கண்கள் படைத்தவர்தான்—கலர்க்கண்ணாடி அணிந்தவரல்ல. ஆனால், காணும் போது, என்ன செய்யமுடியும்? சௌகார்ப்பேட்டையையும் சைதாப்பேட்டையையும் பார்க்கலாம்—கோயங்காவின் ஏட்டையும் தவிக்கும் பாரததேவியையும் காணலாம்—வடவர் சுரண்டும் விதங்களையும் வாழ்வோர் வதைவதையும் காணக்கூடும். பயன்!! தொடர்கதைதான்.

ஆச்சாரியாரை விரட்டி வெற்றி பெற்றதும் அன்பர், டில்லிக்குத்தான் செல்லநேர்ந்தது. விமான நிலையத்தில், தென்னாட்டுப் பார்லிமெண்டு மெம்பர்கள், ஆனந்தத்தோடு வரவேற்றனராம், காமராஜரை. ஆனால்; டில்லி பீடத்தில்! தாக்கீதோடு அனுப்பப்பட்டிருக்கிறார்—'இருந்தால் காங்கிரஸ் தலைவராக, இரு! இல்லையேல் மந்திரியாக இரு!!' என்று என்பதாக. இந்தத் தாக்கீதைத் தந்தவர், பண்டிதநேரு. அவர், இந்தியாவின் பிரதம மந்திரி மட்டுமல்ல, காங்கிரஸ் தலைவராகவும் இருப்பவர்!! அவருக்கு அவ்விதம் இவருக்கு தாக்கீது.

இத்தகைய வடநாட்டின் ஆதிக்கத்தில், இந்நாட்டிற்கு, என்ன செய்யமுடியும்? வயலில் கிளம்பிடும் புலம்பலையோ, வாழ்க்கையில் வீசிடும் கொடுமையையோ, நாட்டின் வாட்டத்தையோ, வெந்து நோவோரின் வேதனையையோ, எங்ஙனம் தீர்க்க முடியும்? ஆசைகளிருக்கலாம்,

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

அனைத்தையும் செய்ய! ஆனால் அதிகாரம்?

முயன்று பார்த்துத் தோற்றார், உத்தமர் ஓமாந்தூரார்! விவசாயிகளின் விளைச்சலுக்கு, அதிகப் பணம் வாங்கித்தர—சிறு, சேவை. முடியவில்லை, அவரால்!! முனகியபடியே இருந்தார், குமாரசாமி ராஜா — அதே கதை, மேலும் தொடருமே யன்றி புதுக் கதை, கிடைக்காது, நமக்கும் — நாட்டுக்கும்.

இதனைப் புரிந்துகொண்டிருப்பதால்தான், மலேயா கழகத்தினர் மற்றோர் கொடியைக் கொடுத்தனர் காமராஜரிடம்—பண்டிதர்மீது, நமக்குள்ள அதிருப்தியைத் தெரிவிக்கும் சின்னமாக!

*

ஆச்சாரியார்! பண்டிதர்!! — இருவரும் தாயகச் சோலைக்கு விரோதிகள் என்றால், காமராஜ் நண்பரா?— எனக் கேட்கலாம். இல்லை! இல்லை!! ஆனால், அவர்களிருவரும் நம்முடன் ஒட்டார். ஏனெனில் ஒருவர் ஜாதி வெறியர்! இன்னொருவர், ஆதிபத்ய வெறியர்!! காமராஜ், இரண்டுக்கு மிடையில் கிடந்து விழிப்பவர். இந்தக் காரணத்தாலேயே, அவர்மீதும் அவர் போன்றோர்மீதும் அனுதாபம், ஏற்படுவதுண்டு! இன்று அரசுக் கட்டில் ஏறுகின்றார்—அன்பர்கள் அகமகிழுகின்றனர் — ஆனால் நாம் நம்முடைய அனுதாபத்தையே தெரிவித்துக்கொள்கிறோம்! ஏனெனில் காமராஜரும் பிறரும் பாடுபட்ட காங்கிரஸ் இயக்கம், பூத்துக் குலுங்கும் பூந்தோட்டமல்ல, இப்போது! புரையோடிப் போன புண்!! காலத்திற்கொவ்வாத கொள்கைகளையும் பழைய சமுதாய அமைப்பையுமே அடிப்படையாகக் கொண்டிருப்பது. அதன் தலைவராக இருந்து எதைச் சாதித்தார், இவர்! இப்போது ஆட்சித் தலைவராக இருந்து எதைச் சாதிக்கப்போகிறார்!!

அதிகாரம், டில்லியிலிருக்கிறது—நாடு சுதந்திரமடைந்து ஆண்டுகள் ஏழாகிவிட்டன. நலிவுப் நீங்கவில்லை! வலிவும் ஏற்படவில்லை!! பிரகாசம்—ஓமந்தூரார்—குமாரசாமி—ஆச்சாரியார், ஆகியோர் அமர்ந்தனர் — போயினர். கண்டதென்ன! பெற்றதென்ன!!

*

கொட்டிய தேளின் கொடுக்கு கிள்ளப்பட்டிருக்கிறது — ஆனால், வாட்டிடும் புலியின் வாயிலிருந்து தாயகம் மீளவில்லையே!! தேளை நசுக்கிவிட்டு, புலியின் கீழிருந்து, புலிக்குப் பணியாற்றப் போகிறேன் என்பதால், என்ன பலன் கிடைக்க முடியும்? முதலமைச்சர் பட்டம் இருக்கும்! ஆனால் மக்கள் மன்றத்தில் இழிச்சொல் நிலைக்கும்!! இந்த இக்கட்டான நிலையைப்போக்கிட, காமராஜர் முன் வருவாரா? முடியாது அவரால்! ஏனெனில், வடவர்மீது வைத்திருக்கும் பாசமும் பற்றும் குறையவில்லை, இன்னும்! இந்த நிலையில், பதவி பீடத் தமரும் அவர்மீது, பரிதாபப்படுகிறோம்.

நஞ்செய்யும் புஞ்செய்யும் நிரம்பிய நாடிது. இதன் மடியிலே விளையும் செல்வத்தைக்கொண்டு, தாயகத்தைச் சிங்காரப் பூமியாக்கலாம்—உலகத்தின் உன்னதச் சுடராகத் திகழும்படிச் செய்யலாம். முடியுமா காமராஜரால்? அரிசிக்கும் பணத்துக்கும் அன்னக்காவடி எடுக்க வேண்டுமே தவிர, தன் சொத்தை, தான் அனுபவிக்க முடியாது. இந்த இக்கட்டான இருள், இன்று — தாயகமெங்கும்! அதே இருளில் இருப்பவர், அரசுக் கட்டிலேறுகிறார்—அனுதாபப்படுகிறோம்.

காலம் ஓடிக்கொண்டே யிருக்கிறது. விடுதலைத்தாகம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது— இந்தக் கட்டத்திலே, நமது கண்ணீரையும் கவனத்தையும் பெற்றவர், அரசு பூபதியாகிறார். எவ்வளவு உத்தமராயினும், காங்கிரஸ் கூடாரத்திலிருந்தால், கேடுகள் மூட்டவும், கிசார்ச்சிகளைக் கிள்ளவும் பின் வாங்கார். கண்டிருக்கிறோம், ஓமந்தூரார் ஆட்சியில்! ஓடிற்று குருதி, குடந்தையில்!

அதே நிலைக்கு, காமராஜரும் செல்லும்படி நேரலாம். ஏனெனில், அவர் வாழும் கோட்டம், குருதி குடிப்பது—தடியையும் துப்பாக்கியையும் நம்பி வாழ்வது. இந்தக் கோட்டத்திலிருந்தபடி, யாரும் தாயகத்தின் வாழ்வை நிமிர்த்திட முடியாது. அதனாலேயே, அனுதாபம் ஏற்படுகிறது, அவர்மீது.

காங்கிரஸ் நண்பர்கள் களிக்கிறார்கள். இக்களிப்பு, கானல்நீர் போன்றது.

காமராஜ் நற்றொண்டர்- அவரது பணி, விழலுக்கு இறைத்த நீராகப் போகிறது.

இருளில் ஒளி காணமுடியாது, இவர்களால்!— இதனை, எண்ணும் போது, அனுதாபப்படுகிறோம்.

அன்பர் காமராஜ், அரசுத் தலைவராகிறார். தொடர் கதையில் புது அத்தியாயம்! அவ்வளவுதான்!!

★

விற்பனையாகிறது

சி. என். ஏ.
தீட்டிய

பவழ பஸ்பம்
விலை அணு 4.

பொன்னொளி
விலை அணு 4

விபரங்களுக்கு:
ஜி. என். சாமி,
118, மவுண்ட் ரோட், சென்னை.

காற்றினிலே வரும் கீதம்

"தாமரை பூத்திருக்கும் தடாகம்! முத்துக்கள் குவிந்திருக்கும், கீழே! அத்தகைய அழகுவாய்ந்தது அது" என்று வர்ணித்ததாம், அன்னப்பறவை.

"அது சரி, அன்னம்! அங்கே கிளிஞ்சல்கள் கிடைக்குமோ?" என்று கேட்டதாம், கொக்கு.

*

இந்தக் கதையை, டில்லி சட்டசபையிலே, காங்கிரஸ் மெம்பர் ஒருவர் கவனமூட்டியிருக்கிறார்—கவிஞர் அரீந்திரநாத் சட்டோபாத்யாவை, கிளிஞ்சல் கேட்ட கொக்குக்கு ஒப்பிட்டிருக்கிறார்.

கவிஞர், வானொலி மந்திரி—கேஸ்கரை, 'வரம்பு மீறிடும்' வகையில் தாக்கினாராம்—வார்த்தைகளில்! அதனால் ஏற்பட்ட கோபத்தில், காங்கிரஸ் மெம்பர், கொக்குக் கதையைக் கூறியிருக்கிறார்!!

வானொலி மந்திரியை, உடனே வீட்டுக்குப் போகச் சொல்லுங்கள்.

ஒரே ஊழல்மயம்! அவர் தர்பார் சகிக்கமுடியவில்லை!!

வானொலியில் திரைப்பட இசையைத் தடுத்தார். இதனால் என்ன உயர்வு ஏற்பட்டிருக்கிறது?

மந்திரிகள் அடிக்கடி பேசிடும் ஒலிபெருக்கியாக இருக்கிறது, வானொலி. நல்ல இசை கேட்க முடியவில்லை! சொற்சித்திரம் கிடைப்பதில்லை, மக்களுக்கு!

கவிஞர் கர்ஜித்திருக்கிறார், இவ்விதம் கோபாவேசம் கூத்தாடியதாம், அவரது பேச்சில். அதைக் கண்ட பல காங்கிரஸ் மெம்பர்கள், காரசாரமாகத் தாக்கிப் பேசியிருக்கின்றனர்—கவிஞரை. வானொலி மந்திரியின் வக்கீல்களாகியிருக்கின்றனர். ஒருவர், கவிஞரை, கிளிஞ்சல் கேட்ட கொக்கென வர்ணித்திருக்கிறார்!

காங்கிரஸ் மெம்பரின் கதை, நன்றாக உள்ளது. ஆனால், அதிலுள்ள கருத்து இருக்கிறதே, அதுதான் சரியில்லை.

இசையின் தரத்தை உயர்த்துவதாகக்கூறி, சாதாரண மக்களுக்குத் தேவையான திரைப்படத்தட்டுகளை ஏன் நிறுத்தினார், வானொலியார்?—என்பது அரீந்திரரின் கேள்வி.

காங்கிரஸ் மெம்பர், 'முத்து இருக்க கிளிஞ்சல் விரும்பிய கொக்கு!' என்று வர்ணிக்கிறார், கவிஞரின் ஆசையை.

உறுப்பினர் மறந்துவிட்டார்! அன்னப்பறவைகள் நிரம்பியது, அல்ல, நாடு—முத்துக்கள் அணியும் வாய்ப்பும் வசதியும் கொண்டோரல்ல, அதிகம் இருப்போர். வயல் மேட்டு நத்தை ஓட்டையும், கடலோரத்துக் கிளிஞ்சல்களையும் காதணியாகவும், கழுத்தணியாகவும் கொள்ளும் மக்களுமிருக்கிறார்கள். அவர்கள், கொக்கின் சுபாவம் கொண்டோராயிருக்கலாம்! முத்து விரும்பா, 'முட்டாள்'களாயிருக்கலாம்!! அதற்காக, அவர்களையெல்லாம், புறக்கணிப்பதென்பது, ஹிட்லருக்கு வேண்டுமானால் — உகந்த காரியமேயொழிய, ஜனநாயகம் பேசிகளுக்கு, ஏற்றதல்ல. ஜனநாயகத்தின் பண்பே, பெரும்பாலானோருக்குப் பிடித்ததை நிறைவேற்றுவதுதான்! கிளிஞ்சல் விரும்பும் கொக்குகளிருந்தால், அவர்களது ஆசையை அடக்கியொடுக்கி, தம்மிஷ்டத்துக்குக் கட்டுப்படுத்துவதல்ல, ஜனநாயகம்.

அதனால்தான் கவிஞர், கேட்டார் "மக்கள் விரும்புகிற இசையைவழங்காமல், உங்களிஷ்டப்படி ஏன்,மாற்றம் செய்தீர்கள்?" என்று.

காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு கோபம், கொந்தளித்திருக்கிறது! காரம் அதிகமாயிருந்ததாம், அரீந்திரர் பேச்சில்.

கவிஞருக்குமட்டுமா? நாட்டு மக்களில் பலருக்குந்தான், வானொலி என்றால், எரிச்சல் ஏற்படுகிறது!

மாலை நேரத்தில், சோலையின் பக்கம் சென்று பாருங்கள் — திருச்சியோ, சென்னையோ அல்ல—நாம் கேட்பது. ரேடியோ, சிலோன்!—இலங்கை வானொலியைத் திருப்புகின்றனர். ஏனெனில், அங்குதான், பாமரமக்கள் விரும்பும் இசை கிடைக்கிறது. சோலைகளிலே மட்டுமல்ல, 'ரேடியோ'க்களிருக்கும் இல்லங்களிலும், ஓட்டல்களிலும், இலங்கை வானொலியே கேட்கிறது! அங்கே, மக்கள் விரும்பும், பாடல்கள் வைக்கப்படுகின்றன. அப்போது, என்ன பேசிக்கொள்கிறார்கள், மக்கள்! 'ஐயோ, கொஞ்சம் திருச்சியை வையுங்கள்' கேட்டுப் பாருங்கள்! — 'செச்சே! உருப்படியாக ஒன்றும் இராது' என்பார்கள். 'சரி! சென்னையை வையுங்கள்' என்று கேளுங்கள். சினந்து விழுவார்கள்! அப்போது கேஸ்கரை, பாராட்டவா, செய்கிறார்கள்? கவிஞர், பாராளுமன்றம் என்பதால், வார்த்தைகளை அளந்து பேசியிருக்கிறார்! மக்கள், வெளியே இருப்பதால், எழுதவொண்ணா மொழிகளில் அர்ச்சனைகள், வழங்குகிறார்கள்!!

மட்டமான இசையைத் தடுத்து, உயர்ந்த சங்கீதத்தை உருவாக்குவதற்காக, திரைப்படத்தின் பாட்டுகளை, தடை செய்தனராம், சர்க்கார்! கூறுகின்றனர், காரணம்.

உண்மை, அதுவா? ஆம் என்பர், காங்கிரசார்! ஆனால், உண்மை அது வல்ல.

இதுபோது, திரைப்படப் பாடல்களில் பல, முன்னேற்றக் கருத்துக்களை ஒலிப்பவையாக இருக்கின்றன—அந்தப் பாடல்கள் மக்களிடையிலும் ஆர்வத்தைப் பெற்றுவிடுகின்றன—அந்தப் பாடல்களை ஒலிபரப்பவேண்டிய நிர்ப்பந்தம்ஏற்படுகிறது. "வாழ்க வாழ்கவே வளமார் திராவிட நாடு!"—இதனை ஏற்குமா வானொலி! "எல்லோரும் வாழவேண்

டும்''—ஒப்புமா, தேசிய சர்க்கார். ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்''—ஏற்கமுடியுமா, இக்கீதத்தை! இதனால்தான், ஒரேயடியாக எல்லாத் திரைப் பாடல்களையும் தடுத்தது, வானொலி.

ஆனால், அந்தக்கீதங்களை, மக்கள் இலங்கையிலிருந்து கேட்கிறார்கள்—'பராசக்தியும், நாம்' படக்குரலும், தங்குதடையின்றி, ஒலிக்கின்றன, இங்கே! காற்றிலே வரும் கீதம்—தடுக்கமுடியவில்லை டில்லியால்!!

கேஸ்கர், சட்டம்போட்டுக்கிளை கானத்தைத் தடை செய்ததால், அவரதுவானொலியின் 'மவுசு' தான் குறைந்தது.

அதுமட்டுமல்ல, இலங்கை வானொலிக்கும் 'வசூல்' அதிகமாயிருக்கிறது. தமதுநிலையத்தில்வைக்கப்படும் இசைத்தட்டுகளை இந்திய உபகண்டத்தினர் ரசிக்கின்றனர் எனக்கண்ட இலங்கையினர், 'விளம்பர ஒலிபரப்பு' ஒன்றையும் புகுத்தினர். அந்த விளம்பரங்கள் மூலம், நிறைய வருவாய், பெறுகின்றனர்! திருச்சிபீடி— சேலத்து சோப் சென்னைசீயக்காய் உள்பட, எல்லாம் அடிபடுகின்றன, இலங்கை வானொலியில்! யார் புத்திசாலி? இலங்கையா! இந்தியாவா!! இதனை அறியமுடியாத அன்பர், 'கிளிஞ்சல் விரும்பியகொக்கு, என்கிறார், குறை கூறிய கவிஞரை.

உயர்ந்த சங்கீதம் முத்தாம்! உண்மையே — வெறும் முத்துக்களை அள்ளியா, போட்டுக் கொள்ளமுடியும், அதற்குமத்தியில், வெள்ளியோ பொன்னோவைக்கப்பட்டால்தானே அது ஆபரணம் ஆகும்-அறியவில்லை, அன்பர். தெரியாததால் அல்ல! தேசிய பாசத்தால்!!

சுதந்திரம் அரும்பிய நாள்முதல் வானொலி இலாகா, நாட்டின் சொத்து என்ற நிலைமாறி, தேசியத்தாரின் திருச்சேவை பரப்பியாகவே இருந்து வருகிறது! இன ஏடுகள் எப்படிச்செய்திகளை இருட்டடிப்புச் செய்தும், திரித்தும், போடுகின்றனவோ—அதே திருப்பணியைச் செய்து வருகிறது!

இதனால்தான் பார்லிமெண்டில் பேசிய அரீந்திரர், ''வானொலி இலாகா, தனிப்பட்ட மந்திரி வசம் இருத்தல் கூடாது. பலர் அடங்கிய ஒரு கார்ப்பரேஷனால், இயக்குவிக்கப்படவேண்டும்.'' என்று கூறியிருக்கிறார். புதிதல்ல இந்தமுறை! பல நாடுகளிலும் இருப்பதுதான். எல்லா விஷயங்களிலும் வெளிநாடுகளை 'காபி' அடிக்கும் சர்க்கார், இந்த விஷயத்தில்மட்டும் தயங்குவானேன்? ஏகபோக உரிமைபோய் விடும் என்ற துடிப்பு! தமதிஷ்டப்படி ஊதும் சங்காக, இருக்கிறதே என்கிற பதைப்பு! இதனாலேயே, ஏதாவது சொன்னால் கோபம் வருகிறது—குதிக்கின்றனர்—கொக்கையும் அன்னத்தையும் உதாரணத்துக்கழைக்கின்றனர்.

சபையில் பலர், 'இலங்கை வானொலி'யை ஒப்பிட்டுப் பேசியிருக்கின்றனர். அதுபோலச் செய்தால், நமக்கும் வருமானம் வருமே என்று எடுத்துரைத்திருக்கின்றனர்.

அதற்கு மந்திரியார், அளித்த பதிலைப் பாருங்கள் — ''இப்போது பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களில் முக்கால்பகுதி, அமெரிக்கா, பிரிட்டன் சரக்கு சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது. இவைகளுக்கு வானொலி மூலம் விளம்பரம் அளிக்கப்பட்டால், இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில், அமெரிக்காவும் பிரிட்டனும் என்ன சொல்கிறதோ, அதன்படி நடக்கும் நிலைமை ஏற்படும். அதனாலேயே இந்திய சர்க்கார் விரும்பவில்லை'' என்று கூறியிருக்கிறார்.

அமெரிக்கா, பிரிட்டன், ஆதிக்கம் செல்லுமாம்! அதனால், அஞ்சுகிறாராம்!! சொல்வது, அமைச்சர். இவரையும் தாண்டியா, வானொலியில், அவர்கள் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும். அப்படித்தான் பார்த்தாலும், இப்போதென்ன வாழ்கிறது! அமெரிக்கர் இல்லாத இடம், எது!!

ஏதோ, கூறுகிறார், கேஸ்கர்—கவிஞரின் கர்ஜனையைக் கேட்டதும் ஏதாவது சொல்லவேண்டிய இக்கட்டு ஏற்பட்டிருக்கிறது. இல்லையென்றால், கூறுவாரா, ''நாடகங்கள் குஜராத்தி, வங்காளம், மராத்தி ஆகிய மொழிகளில்தான் நன்றாக இருக்கின்றன. வேறு மொழிகளில், இல்லை. அதற்காக, மற்ற நிலையங்களில் நடத்தப்படும் நாடக நிகழ்ச்சியை' நிறுத்திடமுடியுமா?'' என்று.

வேறு மொழிகளில் நாடகங்கள் இல்லையாம், நடாத்த! நவில்கிறார், கேஸ்கர்!!

தமிழையும் சேர்த்துத்தான், சொல்லுகிறார். புத்தம் புதிய கவிவாணர்களும், கதாசிற்பிகளும் தமிழ்ச்சோலையில் அரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எண்ணங்களையும், ஏடுகளையும், கேட்பதில்லை வானொலி. 'அம்மாமி'த் தமிழும், பழைய குப்பைகளும், காற்றினிலே கலந்து வந்து, சிந்தையைக் குழப்புகின்றன!

அதுமட்டுமல்ல, 'ஓய்ந்துபோனவர்களையும்' 'மூலையில் கிடப்போரையும் கொண்டுவந்து' எதையெதையோ பேசச் செய்கின்றனர். இந்தக் கூத்தில், அரசாங்க மந்திரிகளே அடிக்கடி பங்குகொள்கின்றனர்!

அம்பேத்கார், பெரிய அறிஞர்—அவரை அழைத்து, ஒரு சிறு சொற்பொழிவுகூடச் செய்யச் சொல்வதில்லை என்று பார்லிமெண்டில் தோழர் ராஜ்போஜ், தெரிவித்திருக்கிறார். அந்தளவுக்கு, வெறியும் சுயநலமும் ஆட்சி புரிகிறது. அதை எடுத்துச் சொல்ல வந்தால், முத்துக்களையே தருவாராம்! கிளிஞ்சல்களை மக்களுக்குத்தர விரும்பாராம்!

காற்றினிலே வரும் கீதம்–கவலையைப் போக்கும், என்பர். இங்கோ கர்ணகடூரமாயிருக்கிறது வெறுப்பை வளர்க்கிறது.

எடுத்துச் சொன்னால் ஏதேதோ சொல்லப்படுகிறது!

ஜனநாயகம் பேசப்படும் நாட்டில், இவ்விதஏதேச்சாதிகாரம் நீடிப்பது, கூடாது. எங்கே, இதைஎண்ணுகின்றனர், தேசியத்தலைவர்கள்! எல்லாம், தங்கள் புகழ்பரப்பிகளாக யிருக்கவேண்டுமென்று விரும்புகின்றனர்!! இதை, இடித்துரைத்தால், பாய்கின்றனர்.

★

திருமதியார் பாராட்டு

ஆனந்த நடனம் ஆடிவிட்டுத் திரும்பிய திருமதியார், சென்னை பெண்கள் சங்கத்தில் பேசியபோது உதிர்த்துச் சென்ற மணிவாசகங்களில் ஒன்று, "நமது தேசத்தின் வெளிநாட்டுக் கொள்கை, வெற்றி மணம் கமழ விளங்குகிறது. அதற்குக் காரணம் காந்தியடிகள் வகுத்துச் சென்ற பாதையில், நாம் நடந்து செல்வதுதான்" என்பது.

திருமதியார், திண்ணைத் தூங்கியல்ல! தேசங்களை பரிபாலிக்கும் உலக சபையின் தலைவர்!! அவர், கூறியிருக்கிறார், இவ்விதம் அண்ணன் திறமைக்குத் தங்கை தரும் நற்சாட்சிப் பத்திரம், குடும்பத்து விஷயமாயிருந்தால் — கவலையில்லை; இது, கோலோச்சப்படும் நாட்டின் பிரச்னை. எனவே, கொஞ்சம், யோசிக்க வேண்டியவர்களாகிறோம்.

திருமதியார், டில்லி பார்லிமெண்டினை உதாரணத்துக்கழைத்து, தனது கூற்றினை விளக்கியிருப்பதால்—நாமும், அங்கேயே செல்வோம்.

கடந்த மார்ச்சு 27-ந்தேதி, டில்லி பாராளுமன்றத்தில், நாட்டின் பாதுகாப்புக்கென ரூ. 223.5-கோடி, ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையைக் கேட்டுப் பேசிய, திருமதியாரின் அண்ணன், வழக்கம்போல், அன்புச் சொல்லை ஆலாபனம் செய்யத் தவறவில்லை. அது, இது—"ஏன், இவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறதென்று, நீங்கள் கேட்கலாம். இன்னொரு நாட்டின் மீது படையெடுக்கவோ, அல்லது போருக்குத் தயார் செய்துகொள்ளவோ, அல்ல—நம்முடைய பாதுகாப்புக்காகத்தான்"

கனிவு, வழிகிறது, பேச்சில்! காந்தியவாடையும் வீசுகிறது!! படையெடுக்கவும், அல்ல—போருக்குப் புறப்படவும், அல்ல. பின் எதற்கு? பாதுகாப்புக்கு! பண்டிதர் கூறுகிறார்.

மடியில் கனமிருந்தால் வழியில் பயம், என்பர். ஆகவே, பண்டிதரின் பேச்சுப்படி பார்த்தால். யாரோ ஒரு எதிரி இருந்துகொண்டிருப்பது, விளங்கும். யார், அந்த எதிரி? விடைகூற முடியாது! விளக்கம் பல தரக்கூடும்!

நாட்டின் சுதந்திரத்துக்கு ஆபத்து வரக்கூடும் — அதற்குத் தற்காப்பு தேவை — அதனால் தான் பணச்செலவு — இவ்வண்ணம், பலப்பலக் கூறக்கூடும் கூறவும், கேட்டுவருகிறோம். ஆனால், வெளிநாட்டுக் கொள்கைபற்றி விவாதிக்கப்பட்டபொழுது, பண்டிதர் இது போன்ற ஆபத்தெதுவும் இல்லையென்று கூறினர்—"ஒரு வருஷத்துக்குள் சண்டை மூளும் என்பதற்கான அறிகுறி, உலக முழுமையும் இல்லை" என்பதாக.

அதுமட்டுமல்ல, அவ்வண்ணம் போர் மூளுவதால் ஏற்படும், ஆபத்துக்களைப்பற்றி அவர் வர்ணித்தது போல, யாராலும் கூறமுடியாது! "ஆயுதத்தால், ஒருவராலும் வெற்றி காணமுடியாது—வினைசை, கொண்டலைகிறார்கள், வெளிநாட்டார். வேதனையூட்டக்கூடிய, நிகழ்ச்சிகள், என்றெல்லாம், எடுத்துரைத்தார். பண்டிதரின் சொல், பார்முழுதும் எதிரொலித்துள்ளது! பலநாட்டின் அரசுமன்றங்களிலும் அலசிப்பேசப் படுகிறது! ஆனால்அவர் நாட்டில், ரூ 223.5 கோடி—நாட்டின் வருமானத்தில் 49 சதவிகிதம்—தேவைப் படுகிறது ராணுவத்துக்கு. கேட்கப்படுகிறது, பார்லிமெண்டில்! எடுத்துக்கொள்ளவும் படுகிறது!!

'பாதுகாப்பு' பெயரால் பலகோடி செலவழிக்கப்படும்பொழுது, அது பற்றி மக்களிடையிலுள்ள நிலை என்ன? பீதி கிளம்பியிருக்கிறதா, பெரும் எதிரியை எதிர்க்கவேண்டுமென்று! நாட்டின் சுதந்திரத்தைக் காக்க எல்லோரும் ஓடிட வேண்டுமென்று, சேனையில் சேருகின்றனரா? அதுதான் இல்லை! மக்கள் மன்றத்தில், பசியும், பட்டினியும், வேதனையும் கண்ணீரும் இருக்கின்றதேயொழிய, 'பாதுகாப்பு' பற்றிய பேச்சே இல்லை. இதனை, நாம் கூறவில்லை — பாதுகாப்பு அமைச்சர் தியாகி என்பாரே, கூறுகிறார்—சர்க்கார் சேர்க்க முயன்ற பிரதேசப் படையில் சேர பலர் முன்வரவில்லையாம்! அதனால் சர்க்கார் சிப்பந்திகளையெல்லாம் கட்டாயமாக அப்படையில் சேர்க்க விரும்புகிறார்!

'பிரதேசப் படை, நாட்டின் பாதுகாப்புப்படை' என்று பேசப்படுகிறது. அதற்கு மக்கள் மன்றத்தில், ஆதரவில்லை! ஏனெனில் அவர்கள் இதைப்பற்றி சிரத்தைகொள்ளவில்லை!!

மக்களுக்கு சிரத்தை இல்லை — ஆனால், சர்க்கார் கூறுகிறது. பாதுகாப்புக்குத் தேவையாம் பலகோடி! பாதி வருமானம்!!

நாட்டின் வருமானம், பூத்துக் குலுங்கவில்லை பிழைக்க வழியில்லை குடிமகனுக்கு வாழவோ, காசில்லை! வரிகளோ, அதிகம்!! அப்படிப் பெறும் பணமோ, இவ்விதம் செலவழிகிறது. எனினும் திருமதியார், அண்ணனைப் பாராட்டுகிறார்!!

அவருக்கு அண்மையில் இரண்டு தினங்களுக்குமுன் லண்டன் பார்லி

உரைகல்

பணம்

"பணம்"—உலகத்தை ஆட்டிப் படைக்கும் இதனுடைய சரிதத்தை விளக்கும் ஏடுகள், தமிழில் அவ்வளவாகக் கிடையாது. அக்குறையைத் தீர்க்கும் ஆசையுடன் ம. தி. தா. இந்துக் கல்லூரிப் பொருளாதார ஆசிரியர் தோழர் சேஷாசலம் M. A. மேற்படி நூலைத் தீட்டியுள்ளார். தெளிந்த கருத்தாழம் நிரம்பிய இந்நூல், பொருளாதாரம் கற்போருக்கு, ஒரு விருந்து. மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு, ஆசிரியர், இந்நூலைத் தயாரித்திருக்கிறார். இதுபோன்ற முயற்சிகள், வரவேற்கப்படவேண்டும், 100-பக்கங்களில், பல விஷயங்கள், தேக்கப்பட்டுள்ளன விலை ரூ 1—8—0. வெளியிட்டோர்:-சிந்தனைப் பதிப்பகம் 27, பாந்தியன் ரோடு, சென்னை 8.

மெண்டில், பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி பட்லர் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை வைக்க விரும்புகிறேம்.

பட்லர்—சர்ச்சிலின், சகா! 'தேசிய பாஷை'யில் நம்மைக் கொடுமைப் படுத்திய வெள்ளைக்காரன்!! அவனது பார்லிமெண்டிலே, பட்ஜட்—அதிலே பாதுகாப்புக்கென, வருமானத்தில் பாதி தொகை ஒதுக்கப் படவில்லை. 30-சதவிகிதம்-வழங்கப் பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் இன்னும் குறையுமென்று, கூறப்படுகிறது! சர்ச்சில், போர்ப்புலி-பிரிட்டன், வல்லரசுகளில் ஒன்று. அதன் பட்ஜட் அப்படி! நேரு, சமாதானம் பேசி, இந்தியா, காந்தியப்பாதையில் செல்வது—இங்கே, இப்படி!!

பிரிட்டன், போர்ப் புயலால் சிக்கிச் சீரழிந்த நாடு. அது, எப்படி எழுந்திருக்குமோ! — என்று, ஆரூடம் கணித்தோரும் உண்டு. அங்கே மக்களின் வருமானத்தில் முன்பு நூற்றுக்கு அறுபது என்று வரிவிதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டது! இப்போதோ, நாற்பது சதவிகிதமாக வந்துள்ளது!! ஏழை சம்பாதிக்கும் தொகையில் பெரும் பாகத்தை வரியாக அழுதுவிட்டால், வாழ்வதெப்படி?—என்ற நோக்கத்துடன் அங்கே வரிப்பளுவைக் குறைக்கிறார்கள் — அதேபோல பொருள்களின் விலைவாசிகளையும் நிதானப் படுத்துகிறார்கள்.

போரின் துவானம் கூடப்படாத இங்கே, என்ன காண்கிறோம்? ஏழை, சம்பாதிக்க வழியில்லை! சம்பாதிப்பவனுக்கு வாழ்க்கைச் சுமையும் வரிப்பளுவும் குறையவில்லை!! பட்ஜட் வழக்கம்போல இருக்கிறது.

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை வகுக்கும்போது, நாட்டின் பொருளாதாரக் கொள்கையை மனதில் கொள்வர். குடியிருக்க வீடுகள் தேவைப்படுமாயின், அதற்கு வழியென்ன என்பதை மனதில் வைக்க வேண்டும் — அதுபோலவே, பசி, பஞ்சம், பட்டினி, வேலையின்மை, இவைகளைப் போக்கவே, 'பட்ஜட்' தயாரிக்கவேண்டும். ஆனல், பண்டிதர் சர்க்கார் 'பட்ஜட்' தயாரிக்கும் போது, நாட்டின் பாதுகாப்பை மனதில் எண்ணுகிறது—பாதி வருமானத்தை, ஒதுக்குகிறது — மக்களின் தலையில் சுமைகளை ஏற்றுகிறது.

எனினும், திருமதியார் இந்தியாவின் புகழ் அகில உலகிலும் ஜொலிப்பதாகக் கூறுகிறார்! அவரது அண்ணன் 'சமாதானக் கொடி பேர்ந்திவிட்டேன்' என்று சங்கநாதம் செய்கிறார்!! — நாமும், கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

★

டில்லியில், ரத்னம்!

திருவாவடுதுறை ராஜரத்னம் பாராட்டப்பெற்றார்! எங்கே? டில்லியில்!!

திகைப் பூட்டும் செய்தி; எனினும் தின ஏடுகளில், வெளிவந்துள்ளது.

அரியக்குடியார்— பல்லடத்தார்— வாசுதேவாச்சாரியார், பொன்னுடை போர்த்து கவுரவிக்கப்பட்டதாக, அறிந்தோம். அதுவே, நடந்துவரும் வழக்கமும் கூட!

இப்போது, அந்த 'பாக்யம்' நமது இசை ரத்னத்துக் கும்கிடைத்திருக்கிறதே—என்று களித்தோம், செய்தியைக் கண்டதும். 'காடி'த் தொண்டையும், 'டைகர்' குரலும், பாராட்டப்படும்போது, நமது ரத்னத்துக்கு, புகழ்மாலைகள் குவிவது, ஆச்சரியமான விஷயமல்ல-அதனை, இதுகாறும், அவர்கள் அறியாமலிருந்ததே, ஆச்சரியம்.

ஆனல், களிப்பை, இடறிஎறிவது போலிருக்கிறது; நாம்கண்ட செய்தி! ராஜரத்னம், பாராட்டப்பட்டது, உண்மை. எங்கே? டில்லியில்தான்! ஆனல், அரசபீடத்தால், அல்ல; மக்களால். அவரதுநாதஸ்வரகானம் கேட்டடில்லிவாசிகர், தேன்குடித்த வண்டாயினராம்—அவர்களிலே 'வானெலி' அமைச்சரும் ஒருவராம் —அவர், வாயார, நாவார, புகழ்ந்திருக்கிறார்! போற்றியிருக்கிறார்!! 'இவருடைய இசைத்திறனன்றோ, திறன்', என்று வியந்திருக்கிறார்.

வியப்பு! ஆனந்தம்! அமுதம் அருந்தினேம் என்ற களிப்பு!—இத்தனையும் இருக்கிறது, டில்லி மக்களிடம்.

ஆனல், அவர்கள் வசிக்கும் டில்லியிலிருக்கும் ஆட்சிப்பீடத்துக்கு, ராஜரத்னம்— இசையரசு— சிதம்பரம் —சித்தூர்— தெரிவதில்லை! தெரிந்தாலும், 'அவாள்'மீதே ஆசையும் பரிவும் உருண்டோடுகிறது!!

ஆண்டு இரண்டாக, இசைவல்லுநர்களுக்கு, மக்கள் வரிப் பணத்தைக்கொண்டு, பொன்னுடையும் பொற்கிழியும்வழங்கிவருகிறது, டில்லிபீடம். ஒருவர்கூட, நம்மவர் இல்லை! எல்லாம் 'அவாள், தான்!!

மக்கள் மன்றத்தின், ரத்னங்களாக ஜொலிக்கும் இசைமணிகள், இருக்கிறார்கள். ஆனல், இவர்களை எண்ணுவதில்லை. அருண்டேலும், அரியக்குடியுமே, காட்சியளிக்கின்றனர்!!—இந்தக் கண்றாவிக்கோலம், தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. ஏன்?

❀

★ முரசொலி ★

தோழர் மு. கருணாநிதி அவர்களது, முரசொலி, மீண்டும்சென்னையிலிருந்து முழக்கம் செய்ய ஆரம்பித்திருக்கிறது. விடுதலைபெறத் துடிக்கும் தாயகத்தின் இழிவுநீக்கப் போராடப் புறப்பட்டிருக்கும் முரசின் முதல் ஒலி, எதிர்பார்க்கும் வேகமும், இலட்சியக் கருத்துகளும் தாங்கி, சிறப்புடன் விளங்குகிறது. தோழர் கருணாநிதியின் எழுத்துக்கள், தாயகத்தின் விடுதலைக்கு மிக மிகப்பயன் வாய்ந்த ஈட்டிகளாகும். இப்போது, அவை, வாரந்தோறும் திராவிடத்தில், கேட்கும்.

வளர்ந்துவரும் உரிமை வேட்கையை உருவாக்கிக்காட்ட நமக்கு, ஏடுகளின் துணைமிகமிகத் தேவை. மாற்றாரிடமிருப்பது போல, வசதிகளைக்குவித்துக் கொண்டு, நடைபோடுகின்றவை அல்ல நமது ஏடுகள். மக்களின் கடமையும்பொறுப்புமே, நமது ஏடுகளுக்குள்ள செல்வங்கள். இந்தவகையில் நமது இலட்சிய முழக்கத்தையேந்திவரும் முரசொலியை ஒவ்வொரு திராவிடவீரரும், ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

விட்டபணியில் தொடர்ந்து ஈடுபடும் தோழர் மு. கருணாநிதியவர்களை, வாழ்த்துகிறோம். முரசொலி ஓங்குக! வாழ்க!!

விலை அணா 2—
'முரசொலி'
ராயப்பேட்டை, சென்னை

விடுதலை வீரர்களே!

★

விடுதலைக் கொடி யேந்திவிட்டனர்! விருது பாடிப் புறப்பட்டுவிட்டனர்! புதுவையின் வீதிகளிலே, பொங்கு தமிழ்க் காளைகள் அறப்போரிலீடுபட்டுவிட்டனர்! — அகமகிழ்ச்சிக்குரிய செய்தி.

இந்த நூற்றாண்டில், ஆதிபத்யம் நடாத்த ஆசைகொள்வோர், கருகிவரும் நேரத்தில், சின்னஞ்சிறு பிரான்ஸ், ஆசையின் காரணமாக நமது திட்டுகளில் ஆட்சி நடத்த எண்ணுவது—கேலிக்கூத்துத்தான்!

பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு, இந்தோசீனாவில், அடிமேல் அடி கொடுக்கப்படுகிறது, 'வியட்மின்' வீரர்கள், துப்பாக்கி ஏந்திப் போரிட்டு வெற்றிபெறுகின்றனர்—போட்டி ஆட்சியும் நடைபெற்று வருகிறது. அங்கு அடிபடும் பிரான்ஸ்இன்று தன் அகங்காரத்தை விடவில்லை! அமெரிக்காவின் உதவியை, நாடுகிறது.

அதேபோல, இங்கும், தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட எண்ணுகிறது. பிரிடிஷ்சிங்கமே, காலனிகளை விட்டு, ஓடிவிட்ட காட்சியைக்கண்ட இந்திய உபகண்டத்தில்—ஏழெட்டு திட்டுகள்! இவைகளிலே, பிறர்!! எத்தனை நாளைக்குச் சகிக்கமுடியும்? விடுதலை வரலாறுகளின் தன்மையை அறிந்தோர், புதுவைக்கிளர்ச்சியின் விளைவையும் அளவையும் கண்டுமகிழாமலிருக்கமுடியாது. நமது வீரர்கள், பிற இடங்களைப்போல, ஆயுதங்கள் ஏந்தி, கிளம்பவில்லை. அன்பே அவர்கள் ஆயுதம்! அறநெறியே, கேடயம்!! —கோரிக்கையின் குரலொலியில் நியாயமும் நீதியும் பிணைந்து கிடப்பதால், அவர்கள், வெற்றி வீரர்களாகப் பவனிவருகின்றனர். ஆனால் அவர்களுக்கு 'ஆதிபத்ய அரசு' வழங்கும் பரிசு— தடியடி! சிறை! குண்டர்கள் ஆட்டம்!! இவை, சகஜம் தான். சிம்மாசன பூபதிகள், மக்கள்மீது, நடத்திப் பார்த்துத் தோல்வி கண்ட, பழைய முறைகள் இவை. பாரீஸ்பிம்பத்தினர், புதுவையில் செய்யப் புறப்படுகின்றனர்! அன்றோர்நாள், பிரெஞ்சு மண்ணிலே, உதித்த உரிமை முழக்கத்தின் விளைவுகளை, பிரெஞ்சினர், மறந்திருப்பதைக் காணவேதனையடைகிறோம். வால்டேர், கிளப்பிய சங்கநாதம், உலகத்தின் முன்பு இன்னும் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. அதனையும் மறந்தனர்போலும்! சுதந்திரம்— சமத்துவம் — சகோதரத்துவம் எனும் அழகான மூன்று முழக்கங்களை உலகுக்களித்த பிரான்ஸ், இன்று அவைகளை அடக்க ராணுவத்தையும், போலீசையும் நம்புகிறது!! விந்தைக்குரிய காட்சிதான்.

விடுதலைப் போரில் வீறுகொண்டெழுந்துள்ள மக்களை, நாம் வாழ்த்துகிறோம் புதுவைக்கிளர்ச்சியில், தி. மு. க தோழர்களும் பங்கு கொண்டிருக்கிறார்கள். அவர்கள், இந்தக்காரியத்தை அடுத்து நடைபெறப் போகும் தாயக விடுதலையின் முதற்கட்டமாகக் கருதவேண்டும் சகிப்புத்தன்மை—தியாக உள்ளம் இரண்டிற்குமுன், துப்பாக்கியும் அடக்குமுறையும் தூள் தூளாகியே தீரும்! இதனை, மனதில்கொண்டு விடுதலை வீரர்களை, வாழ்த்துகிறோம். முக்கிய பணியிலீடுபட்டிருக்கும்போது நமது சகோதரர்களையே எதிரிகளாக்கி நம்மைத்தாக்கும் சதிகளை, பிரெஞ்சு ஆதிக்கம் செய்யலாம். புதுவை அரசியலில், இது எளிதான சம்பவம்! அதன் பக்கம் கண்களைத் திருப்பக்கூடாது, அறப்போர் வீரர்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் வீரத்தோடு அன்பு வழியில், அறப்போரிலீடுபடுக! — என்று, விடுதலை வீரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம் ஒழிக, காலனி ஆதிபத்யம்!

சங்கரன் மறைவு.

அந்த அன்பு முகம்! — இனிக் காணமுடியாது என்றெண்ணும் போது. தாளமுடியவில்லை நம்மால். திருச்சி நண்பர் சங்கரன், இயக்கத்துக்கும் நமக்கும் அறிமுகமான நீண்டகால நண்பர். அவர், இவ்வளவு சீக்கிரம் நம்மை விட்டுப் பிரிவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. வயது 47 தான். எனினும் இருமல்நோய் காரணமாக 4-4-54 அன்று திருச்சியிலுள்ள தமது இல்லத்தில், இரண்டு ஆண் குழந்தைகளையும் நான்கு பெண் குழந்தைகளையும், மனைவியாரையும், தம்பி சாம்பு அவர்களையும், விட்டுவிட்டுப் பிரிந்து விட்டார்.

17 ஆண்டுகளாக திருச்சி நகராட்சி மன்ற உறுப்பினராகவும், பல பொதுப் பணிகளிலும் பங்கெடுத்துக் கொண்டு பணியாற்றிருக்கிறார் நண்பர் சங்கரன். திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. முதல் மாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவராகவும் இருந்தார். அவரது இல்லம், இயக்கத்தோழர்களை வரவேற்கும், கூடம். திருச்சியென்றால் பலருக்கு சங்கரன் இல்லமே, நினைவுக்கு வரும். அத்தகைய அருமையான நண்பர் ஒருவரை, இழந்து விட்டோம். அவரது குடும்பத்தாருக்கு, எவ்வகையில் ஆறுதல் கூறுவதெனத் தெரியவில்லை. அண்ணனை இழந்த தம்பி சாம்பு அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். காலம், கண்ணீரைத் துடைக்குமாக.

Phone: 40 Grams: "ILWA"

SHORT - TERM COURSES

As in previous years, Six weeks short term vacational courses in Automobile Service Engineering and Radio Service Engineering will be conducted from 3-rd May to 14-th June.

Ten Seats are reserved for girl-students upto 14-th April. For particulars and prospectus, apply to:—

PRESIDENT
INDUSTRIAL LABOUR WELFARE ASSOCIATION Ltd,
1—4—1954 AVANASHI ROAD, COIMBATORE.

இறக்குமதி!

பிரிட்டிஷ் ரெயில்வே தொழிற்சாலைகளில் பல ஆண்டுகள் பணியாற்றிப் பயிற்சியுள்ள எஞ்ஜினியர்களையும் தொழில் வல்லுநர்களையும் சித்தரஞ்சன் ரயில்வேத் தொழிற்சாலைக்கு உதவ பிரிட்டிஷ் சர்க்கார் சம்மதித்திருக்கிறது. கொழும்புத் திட்டத்தொழில்நுணுக்க உதவியின் கீழ் இந்திய சர்க்காரின் வேண்டுகோளுக்கிணங்க இவர்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள். வருஷத்திற்கு 150 ரெயில்வே எஞ்சின்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ள இந்தத் தொழிற்சாலையில், 1953 இறுதியில் கொழும்புத் திட்டத்தின்கீழ், ஒரு வருஷ ஒப்பந்தத்தில் எட்டு பிரிட்டிஷ் நிபுணர்கள் சேர்ந்தார்கள்.

இப்போது இரண்டு வருஷகால ஒப்பந்தத்தில் 13 தொழில்வல்லுநர்களை அனுப்ப பிரிட்டிஷ் சர்க்கார் இசைந்துள்ளது. ஏற்கனவே இங்கு தொழிலாற்றும் மூன்று பிரிட்டிஷ் நிபுணர்களை மீண்டும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சென்ற மாத இறுதியில் மற்றவர்களில் பெரும்பாலோர் இந்தியாவந்து சேர்ந்தனர்.

சேலம் மாவட்ட மாநாடுகள்

மே 1, 2 தேதிகளில் நடைபெறுகின்றன.

மே 1 சனிக்கிழமை சமுதாய சீர்திருத்த மாநாடு

தலைவர்: **தோழர் ப. உ. சண்முகம்**

திறப்பாளர்:-

சென்னை வழக்கறிஞர் **கோகுலகிருஷ்ணன்** பி. ஏ. பி. எல்.

மே 2. ஞாயிறு தி. மு. க. அரசியல் மாநாடு

தலைவர்:-

கடலூர் வழக்கறிஞர் **இரே. இளம்வழுதி** எம். ஏ. பி. எல்.

திறப்பாளர்:

மதுரை **தோழர் எஸ். முத்து**

இரண்டு நாட்களிலும்: பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கலைஞர் மு கருணாநிதி, என். வி. நடராசன், கே ஏ மதியழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், அ. பொன்னம்பலனார், டி. கே. தாமரைச்செல்வன், கி. மனோகரன், பூ கணேசன், இருதயராஜ், தோழியர்கள் சத்தியவாணிமுத்து, அருண்மொழி, பூங்கோதை, தோழர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், கே. ஆர். இராமசாமி, எம். எஸ் இராமசாமி, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அலிசேக்மன்சூர் மற்றும், சட்டசபை பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துக்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டு நாட்களிலும் இயக்கப் பிரச்சார நாடகங்கள் நடைபெறும்.

ஆர் எம். குப்புசாமி பொருளாளர்

ப. இராமலிங்கம் செயலாளர்

ஜி. பி. சோமசுந்தரம் வ கு தலைவர்

ப. கண்ணன் துணைச்செயலாளர்,

வி. சிவப்பிரகாசம் அலுவலகப் பொறுப்பாளர்.

இரா. தாண்டவன் தொண்டர்படைத் தலைவர்.

பி. எம். கோபால் தொண்டர்படைத் துணைத் தலைவர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
25, Tirukkachinambi St., Kancheepuram.